# 2021

# වාර්ෂික වාර්තාව

# வருடாந்த அறிக்கை

# ANNUAL REPORT

ශ්‍රී ලංකා නව නිපැයුම්කරුවන්ගේ කොමිසම

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

**SRI LANKA INVENTORS COMMISSION**

නිපුණතා සංවර්ධන, වෘත්තීය අධ්‍යාපන, පර්යේෂණ හා නව නිපැයුම් රාජ්‍ය අමාත්‍යාංශය

திறன்கள் அபிவிருத்தி, தொழில்நுட்பக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க அமைச்சு

State Ministry of Skills Development, Vocational Education, Research & Innovation

---

46-48, Cotta Road, Colombo 08

Tel: 011-2676650, Fax: 011-2676646

Website: www.slic.gov.lk, Mail: info@slic.gov.lk

# வருடாந்த அறிக்கை - 2021


## இலங்கை புத்தாகுனர் ஆணைக்குழு

(திறன் அபிவிருத்தி தொழில் கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு)

**இல. 46-48, கொட்டா வீதி**

**கொழும்பு 08**


**உள்ளடக்கம்**

**பக்கம்**


| | |
|---|---|
| ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் | 3 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் உறுப்பினர்கள் | 3 |
| திறன் அபிவிருத்தி தொழில் கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு | 3 |
| ஆணையாளரின் செய்தி | 4-5 |
| 1. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு | 6 |
| 1.1 அறிமுகவுரை | 6 |
| 1.2 நோக்கு | 6 |
| 1.3 பணி | 6 |
| 1.4 குறிக்கோள்கள் | 6 |
| 1.5 ஆணைக்குழுவின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகள் | 6-7 |
| 1.6 அமைப்பாண்மை கட்டமைப்பு | 8 |
| 1.7 மனித வளங்கள் | 9 |
| 2. 2021ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட முக்கிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சி திட்டங்கள் | 10 |
| 2.1 இலங்கையை புத்தாகங்களின் மூலம் உலகத்துடன் இணைப்பதற்கு “சஹசக் நிமவும் 2021” சர்வதேச கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்க கண்காட்சி மற்றும் போட்டி | 10-11 |
| 2.2 புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்தி சுற்றுச்சூழலுக்கு உகந்த மின் உற்பத்தியைக் கண்டறிதல் | 11 |
| 2.3 புத்தாகங்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கான IAFM-SL (இலங்கைக்கான கண்டுபிடிப்புக்களினை விரைவுபடுத்துவதற்கான நிதி பொறிமுறை) கருத்திட்டம் | 11-12 |
| 2.4 “Nawa Nipayum Diriya” புத்தாக்கங்களுக்கான வர்த்தக அடிப்படையினை தாபித்தல் | 12 |
| 2.5 புத்தாக்குனர்களுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்க தொழில்நுட்ப அடைகாப்பு மையங்களை தாபித்தல் | 13 |
| 2.6 புத்தாக்கங்களின் வணிகமயமாக்கலுக்கு தேசிய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை உருவாக்குதல் | 13-15 |
| 2.7 இளம்கண்டுபிடிப்பாளர்கள் சங்கங்களை நிறுவுதல் - இலங்கையின் புத்தாக்க கலாச்சாரத்தை முன்னேற்றுவதற்கான வழி | 15-16 |
| 2.8 தேசிய மற்றும் சர்வதேச அளவில் அதிபுலமை சொத்துரிமையை பாதுகாக்க புத்தாக்குனர்களுக்கு உதவுதல் | 17 |
| 2.9 நடப்பு சமூக பிரச்சனைகளுக்கு புது முறையில் தீர்வுகள் | 17-20 |
| 2.10 ஆராய்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கான சர்வதேச மாநாடு (“புத்தாக்கத்திலிருந்து அதன் தாக்கம் வரை - FITI” 2021) | 21 |
| 2.11 கருத்து அடைகாப்பகம் (கருத்துக்களினை உருவாக்கும் அரங்கம்) | 21 |
| 2.12 கண்டுபிடிப்பாளர்களுக்கு வழங்கப்படும் விசேட சேவைகள் | 22 |
| 2.13 புத்தாக்குனர் முன்னரங்கு | 22 |
| 2.14 சர்வதேச அங்கீகரிப்பு | 22 |
| 2.15 தேசிய புத்தாக்குனர் தினம் | 23 |
| 2.16 புத்தாக்கங்களினை பிரபல்யப்படுத்தல் | 23 |
| 2.17 ஊடக பிரச்சாரம் | 23-24 |
| 2.18 மனித வள அபிவிருத்தி | 24 |
| 3. நிதி அறிக்கை | 25-51 |

## ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்

பேராசிரியர் N.M.S. சிரிமுது (27.07.2021 இலிருந்து 31.12.2021 வரையில்)

பேராசிரியர் ரங்கிக உமேஷ் ஹல்வதுற (01.01.2021 இல் இருந்து 26.07.2021 வரையில்)

நீலிகா மாளவிகே (01.01.2021 இல் இருந்து 31.12.2021 வரையில்)
**உதவி ஆணையாளர்**

Dr. M.H.M அனுபா இந்திக ஹேரத் (08.04.2021 இல் இருந்து 31.12.2021 வரையில்)
**உதவி ஆணையாளர்**

திரு. A.P.S.L. விஜேசிங்க (01.01.2021 இல் இருந்து 07.04.2021 வரையில்)
**உதவி ஆணையாளர்**

திரு. P.V.B.P. சிசிர நந்தன (01.01.2021 இல் இருந்து 31.12.2021 வரையில்)
**திறைசேரி பிரதிநிதி**

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் உறுப்பினர்கள்

திரு. P.V.B.P. சிசிர நந்தன (01.01.2021 இல் இருந்து 31.12.2021 வரையில்)
**திறைசேரி பிரதிநிதி**

நீலிகா மாளவிகே (2021.01.01 இல் இருந்து 2021.12.31 வரையில்)
**உதவி ஆணையாளர்**

Dr. M.H.M. அனுபா இந்திக ஹேரத் (2021.04.08 இல் இருந்து 2021.12.31 வரையில்)
**உதவி ஆணையாளர்**

Mr. A.P.S.L. விஜேசிங்க (2021.01.01 இல் இருந்து 2021.04.07 வரையில்)
**உதவி ஆணையாளர்**

திருமதி. H.D. அனுருத்திகா (2021.01.01 இல் இருந்து 2021.12.31 வரையில்)
**உள்ளக கணக்காய்வாளர்**

## திறன் அபிவிருத்தி தொழில் கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு

திரு. H.M.U.S.A. விஜேகோன் (2021.05.01 இல் இருந்து 2021.12.31 வரையில்)
**கணக்காய்வாளர் நாயக திணைக்கள பிரதிநிதி**

**Mrs. W.P.L.S.R. Perera** (2021.01.01 இல் இருந்து 2021.12.31 வரையில்)
**கணக்காய்வாளர் நாயக திணைக்கள பிரதிநிதி**

# ஆணையாளரின் செய்தி



**பேராசியரியர் என்.எம்.எஸ் சிறிமிது ஆணையாளர்**
**இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு**

1979 இன் 53 ஆம் இலக்க இலங்கைப் புத்தாக்குநர்கள் ஆணைக்குழச் சட்டத்தின் கீழ் இலங்கைப் புத்தாக்குநர்கள் ஆணைக்குழுவினைத் தாபித்ததன் அடிப்படை நோக்கம், புத்தாக்குநர்களுக்கு தொழில்நுட்ப, நிதியியல் மற்றும் சட்ட உதவியினை வழங்குகின்ற அதேவேளை, தேசியளவிலான புத்தாக்கத்தினை ஊக்கவிப்பதாகும்.

ஆணைக்குழு,பல்வேறு சவால்களை எதிர்கொண்டதுடன் இப்பிரச்சினைகளை தீர்ப்பதன் காரணமாக மாத்திரமின்றி சவால்களை வெற்றிகரமாக முறியடிப்பது புதாக்குநர்கள் மீதும் ஒட்டுமொத்த சமூகத்தின் மீதும் சாதகமான தாக்கத்தினைக் கொண்டுள்ளது. இலங்கையில் புத்தாக்க் கலாசாரமொன்றைத் தோற்றுவிப்பதன் வாயிலாக மக்களின் ஆக்கதிறனை இது அதிகரிப்பதுடன் தேசிய பொருளாதாரத்தை உயர்த்தவதில் இது மிகுந்த ஆதரவளிக்கும்.

இலங்கை புத்தாக்குநர்கள் ஆணைக்குழுவானது அத்தகைய ஆலோசனைகள், எதிர்பார்க்கைகள் மற்றும் குறிக்கோள்களை எய்துவதற்கு எப்போதும் அர்ப்பணித்துள்ளதுடன் இவ் எதிர்பார்க்கைகளையும் குறிக்கோள்களையும் அடைவதற்கு இலக்கை நோக்காகக் கொண்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது. புத்தாகுநர்களின் ஆர்வத்தை பிரபல்யப்படுத்தி அதிகரிப்பதற்கு சரியான சமூகமயப்படுத்தல் அவசியமாகும். ஆகையினால், இவ்வெண்ணக்கருக்களை யாதார்த்தமாக்குவதற்கு பல எண்ணிக்கையான நிகழ்ச்சித்திட்டங்களை ஆணைக்குழு நடைமுறைப்படுத்தவதுடன் இவற்றில் “சஹசக் நிமவும்” கருத்திட்டம் தனித்தவமிக்கதாகும். 2012 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தேசிய கண்காட்சி, இலங்கை வரலாற்றில் சர்வதேச புத்தாக்க மற்றும் புத்தாக்க கண்காட்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. “சஹசக் நிமவும்” நிகழ்ச்சித்திட்டம், நாட்டினுள் சர்வதேச கண்காட்சி அனுபவத்தினை பகிர்ந்து கொள்வதற்கு இலங்கைப் புத்தாக்குநர்களுக்கு வாய்ப்பளிக்கின்றது.

ஆணைக்குழவினை தாபிப்பதற்கான சட்டத்தின் பிரகாரம் சந்தை வாய்ப்பினைக் கொண்டுள்ள புத்தாக்கங்களுக்கு தொழில்நுட்ப மற்றும் நிதியியல் உதவியினை வழங்கும்பொருட்டு “இலங்கைக்கான புத்தாக்க துரிதப்படுத்தநர் நிதியளித்தல் பொறிமுறை” மற்றும் “நவ நிபயும் திரிய” என்ற பெயரிலான 2 கருத்திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. நிபுணத்துவக் குழுவொன்றின் ஊடாக இனங்காணப்படும் வாய்ப்புமிக்க புத்தாக்கங்களுக்கு நிதியியல் மற்றும் தொழில்நுட்ப உதவி வழங்கப்படுகின்றது.

தேசிய புத்தாக்க வள நிலையங்களைத் தாபிப்பதன் மூலம் தேசிய புத்தாக்குநர்களின் புத்தாக்கங்களை மேலும் அபிவிருத்திசெய்வதற்கு தொழில்நுட்ப உதவியை வழங்குவதற்கு இலங்கைப் புத்தாக்குநர்கள் ஆணைக்குழு நடவடிக்கைகளை எடுத்தது. அத்துடன் அர்களது ஆராய்ச்சித் தேவைகளை நிறைவேற்றிக்கொளவதற்கு புத்தாக்குநர்களை வேறு தொடர்புரடய நிறுவனங்களுடன் தொடர்புபடுத்தவதன் ஊடாக காத்திரமான பெறுபேறுகள் அடையப்பெற்றன.

உள்நாட்டு புத்தாக்குநர்களின் புத்தாக்கங்களை மேலும் அபிவிருத்திசெய்வதற்கான தொழில்நுடப் ஆதரவை வழங்குவதற்கு இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக்குகுழு தேசிய புத்தாக்க வள நிலையங்களை நிறுவியுள்ளது. அவர்களது ஆராய்ச்சித் தேவைகளை நிறைவுசெய்வதற்கு வேறு தொடர்புடைய நிறுவனங்களுக்கு பல்கலைக்கழங்களுக்கு புத்தாக்குநர்களைத் தொடர்புபடத்துவதும் சிறந்த பெறுபேறுகளை விளைவித்தது.

புலமைச் சொத்து உரிமைகளை பெற்றுக்கொள்வதில் உதவுவதற்கான தனித்தவமிக்க நிகழ்ச்சித்திட்டமொன்றையும் ஆணைக்குழ நடைமுறைப்படுத்துகின்றது. இது புத்தாக்கங்களின் பாதுகாப்பிற்குச் சான்றளிக்கின்றது.

மேலும், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக புத்தாக்கங்களைப் பரவச்செயவதற்கும் திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, “இலங்கைப் புத்தாக்குநர்கள்” என்ற யூரியூப் அலைவரிசையை அறிமுகப்படுத்தயின் ஊடாக சந்தை வாய்ப்புகளுடன் கூடிய கண்டுபிடிப்புகள் பற்றிய உள்நாட்டு மற்றும் சர்வதேச வியாபாரங்களுக்கு தெரியப்படுத்தவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. புத்தாக்கத்தில் ஆர்வமள்ளவர்களுக்கு இது மிகவும் சிறந்த பெறுவழியை வழங்கியது. புத்தாக்கங்களுக்கும் புத்தாக்குநர்களுக்கும் இடையில் பங்குடமையை பேணிவளர்ப்பதற்கு உருவாக்கப்பட்ட ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளமானது புதிய ஏண்ணக்கருக்களை ஊக்குவிப்பதில் முக்கிய பங்காற்றுகின்றது.
இதற்கு மேமலதிகமாக, புத்தாக்குநர் இயலளவு விருத்தியை ஏற்பாடுசெய்தல், ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 26 அன்று தேசிய புத்தாக்குநர் தினத்தைக் கொண்டாடுதல், புத்தாக்குநர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குதல்,

புத்தாக்குநர்கள் எதிர்கொள்கின்ற சவால்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கு புத்தாக்குநர் மன்றத்தை நடாத்ததல், புத்தாக்க விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்ததல் போன்ற விசேட கடமைகளையும் ஆணைக்குழ கொண்டு நடாத்தக்கூடியதாகவிருந்தது.

எண்ணிக்கையில் குறைவாவிருந்த போதிலும் இற்றை வரை நிறுவனத்தின் அனைத்து அடைவுகளுக்கும் தமது ஆதரவை வழங்கிய ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு மிகவும் மதிப்பளிப்பது முக்கியமாகும்.

புத்தாக்குநர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கான இம்முயற்சியில் இலங்கை புத்தாக்குநர்கள் அணைக்குழுவிற்கு அதரவை வழங்கிய அனைவருக்கும் எனது ந்னறிகள் உரித்தாகும். அத்துடன், இலங்கையின் வர்த்தக நாமங்களை வெளிநாடுகளில் ஊக்குவிக்கக் கூடிய புத்தாக்பகங்களை உருவாக்குகின்ற அதேவேளை நாட்டில் புத்தாக்கமிக்க கலாசாரத்தை பேணிவளர்ப்பதற்கு தேசிய புத்தாக்குநர்களுக்கு எனது ஆசிர்வாதத்ததை வழங்குகின்றேன்.

# 1. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

## 1.1 அறிமுகவுரை

1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கத்தினை கொண்ட இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தின் நிபந்தனைகளுக்கு அமைவுற தாபிக்கப்பட்ட நியதிசட்ட சபையான இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் (SLIC), பிரதான குறிக்கோளானது, அக புத்தாக்குனர்களின் புத்தாக்க திறனுக்கு ஆதரவு மற்றும் ஊக்குவிப்பு வழங்குதல், புத்தாக்கங்களின் தரத்தினை மேம்படுத்தல் மற்றும் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஒதுக்கீடுகளினை மேற்கொள்ளல் என்பனவாகும்.

## 1.2 நோக்கு

**"கண்டுபிடிப்புக்கள் மற்றும் புத்தாக்கத்தின் ஊடாக சுபீட்சமடைதல்".**

## 1.3 பணி

"தேசத்தில் புத்தாக்க இயலளவுகளை வெளிக்கொணர்கின்ற முன்னணி வினையூக்கியாக திகழ்தல். சிந்தனைகளினை செய்முறை பிரயோகங்களாக மாற்றுகின்ற செயன்முறையினை வசதிப்படுத்தும் முன்னோடியாக விளங்குதல்".

## 1.4 குறிக்கோள்கள்

1.4.1 இலங்கை பிரசைகளினை புத்தாக்கம் மற்றும் புது கண்டுபிடிப்புக்களினை செய்வதற்கு ஊக்குவித்தல்.

1.4.2 புத்தாக்குனர்களுக்கு தொழில் நுட்பவியல் உதவிகள், நிதி உதவிகள் மற்றும் சட்ட உதவிகளினை வழங்கல்.

1.4.3 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தில் குறித்துரைப்பு செய்யப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்.

1.4.4 மேற் கூறப்பட்ட சகல குறிக்கோள்களினையும் சாதிப்பதற்கு தேவையான சகல செயற்பாடுகளினையும் முன்னெடுத்தல்.

## 1.5 ஆணைக்குழுவின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகள்

அ) புத்தாக்குனர் புத்தாக்கங்களை காப்புரிமை வழங்கப்படுதலிற்கு ஏற்புடையதா என உறுதி செய்து கொள்வதற்கு அவர்களின் புத்தாக்கங்களை பரிசலித்து அவர்களுக்கு தொழினுட்பவியல் உதவிகளை வழங்கல் மற்றும் ஆணைக்குழுவின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய புத்தாக்குனர்களுக்கு காப்புரிமை விண்ணப்பங்களை தயாரிக்க உதவி செய்தல்.

ஆ) ஆணைக்குழுவின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவுற காப்புரிமை பெற்றுக்கொண்ட புத்தாக்கங்களையும் மற்றும் காப்புரிமை பெறப்படாது நிலுவையாக இருக்கும் புத்தாக்கங்களையும் விருத்தி செய்வதற்கு, நேர்த்தியாக்குவதற்கு நிதியுதவிகளை வழங்கல்.

இ) ஆணைக்குழுவின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவுற இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் புத்தாக்குனர்களுக்கு காப்புரிமைகளை பெற்றுக்கொள்வதற்கும் அவை சூறையாடப்படாது பாதுகாக்கபடுவதற்கும் சட்ட ரீதியாக உதவியாக இருத்தல்.

ஈ) இலங்கைக்கு பயனளிக்ககூடிய புத்தாக்கங்களை அப்புத்தாக்கங்களின் முக்கியத்துவம் மற்றும் வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கான சாத்தியத்தன்மை என்பனவற்றை கருத்திற்கொண்ட பின்பு அவற்றை மேலும் உற்பத்தி செய்வதற்காக தேவையான நிதியுதவியை வழங்குவதற்கு அரசின் கீழடங்கும் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு அவர்களுக்கு நீண்ட கால கடன் வழங்க பரிந்துரைத்தல்.

உ) புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்களுக்கான சந்தையினை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தேடிக்கொள்வதற்கு உதவியாக இருத்தல்.

ஊ) புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்களின் பெறுமதியினை பலர் அறியச்செய்யும் வகையில் வருடாந்தம் கண்காட்சிகளை "புத்தாக்கங்களுக்கான ஜனாதிபதி விருது" எனும் தலைப்பில் நடாத்தி அந்த கண்காட்சி விழாவின் போது இலங்கையில் காப்புரிமை பெற்ற புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்கள் தொடர்பில் விருதுகள் வழங்கப்படும் என்பதுடன் இந்த விழாவின் போது தெரிவு செய்யப்படும் புத்தாக்கங்களாவன விவசாயம், இரசாயணவியல், மருத்துவம், தேசிய பாதுகாப்பு, மருந்தகவியல், பௌதிகவியல், பொது பாதுகாப்பு மற்றும் நலன்புரி பொதுப்பணிகள், போக்குவரத்து மற்றும் விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம் ஆகிய துறைகளுடன் தொடர்புடைய துறைகளினை சார்ந்தவையாக இருத்தல் வேண்டும்.

எ) ஒரு பொது ஆராய்ச்சி ஆய்வுகூடம் மற்றும் சோதனை நிலையத்தை தாபித்தல். அங்கீகரிக்கப்பட்ட புத்தாக்குனர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட தமது புத்தாக்கங்களை மேலும் சீர்படுத்திக் கொள்வதற்கு இந்த ஆராய்ச்சி கூடங்களிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய சோதனை சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

ஏ) இலங்கை வாழ் மக்களிடையே புதிது புனைதல் மற்றும் படைப்பாக்கற்றிறன்; என்பனவற்றை மேம்படுத்தவும் மற்றும் வருடாந்தம் இடம்பெறும் "ஆக்கற்றிறன் மிகு ஆராய்ச்சி போட்டியில்" "புத்தாக்கத்திற்கான ஜனாதிபதி விருது வைபத்தின்" நடுவர்களால் மேலே பந்தி (ஊ) வில் கூறப்பட்டதும் விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பத்துடன் தொடர்புடைய துறைகளில் புதிய படைப்புக்களை படைத்தலில் துணையாக இருப்பதற்கும் மற்றும் அதில் வெற்வியாளர்களை தெரிவுசெய்து பணப்பரிசு மற்றும் பதக்கங்களை வழங்குவதற்கும்.

ஐ) புத்தாக்கம், ஆராய்ச்சிகள் மற்றும் பொதுவான விஞ்ஞானம் என்பவற்றில் தகவல்களை பிரிசுரித்தலும் பரப்புவதற்கு.

ஒ) புத்தாக்குனர்களிடையே கருத்துக்களை பரிமாறிக்கொள்வதற்கு ஒரு ஒழுங்கு முறையில் மாதாந்தம் கூட்டத்தொடர்களை நடாத்துவதற்கு.

ஓ) புத்தாக்கங்கள் மற்றும் ஆராய்ச்சிகளுக்கான சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்வதற்கு இலங்கை புத்தாக்குனர்களுக்கு உதவுதல் அல்லது அத்தகைய போட்டிகளில் அவர்களை பங்குபெறச் செய்வதற்கு பரிந்துரைத்தல் மற்றும்,

ஔ) இலங்கை வாழ் இளைஞர்களிடையே படைப்பாற்றல் திறனை ஊக்குவிப்பதற்கு பள்ளிகூடங்கள் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் ஆக்கற்றிறன் சங்கங்களை ஒழுங்கமைத்தல்.

## 1.6 அமைப்பாண்மை கட்டமைப்பு



## 1.7 மனித வளங்கள்

| பதவிகள் | அனுமதிக்கப்பட்ட தொழில் நிலைப்பிரிவு | 2021 ஆம் வருடத்தில் தொழில் நிலைப்பிரிவு | 2021 டிசம்பர் 31 இல் வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| பணிப்பாளர் (சிரேட்ட நிறைவேற்று அலுவலகர்) | 01 | 01 | - |
| பிரதி பணிப்பாளர் / உதவி பணிப்பாளர் | 02 | 02 | - |
| பிரதி பணிப்பாளர் / உதவி பணிப்பாளர் (நிதி ) | 01 | 01 | - |
| சட்ட அலுவலகர் | 01 | - | 01 |
| நிகழ்ச்சித்திட்ட அலுவலகர் | 03 | 03 | - |
| நிர்வாகஅலுவலகர் | 01 | 01 | - |
| நிதி அலுவலகர் | 01 | 01 | - |
| ஆராய்ச்சி உதவியாளர் | 05 | 03 | 02 |
| முகாமைத்துவ உதவியாளர் | 07 | 07 | - |
| சாரதி | 04 | 04 | - |
| அலுவலக உதவியாளர் | 02 | 02 | - |

## 2. 2021 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட முக்கிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சி திட்டங்கள்

### 2.1 இலங்கையை புத்தாகங்களின் மூலம் உலகத்துடன் இணைப்பதற்கு “சஹசக் நிமவும் 2021” சர்வதேச கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்க கண்காட்சி மற்றும் போட்டி

"சஹசக் நிமவும்" சர்வதேச கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்க கண்காட்சி மற்றும் போட்டியானது கண்டுபிடிப்பாளர்களுக்கு அவர்களின் கண்டுபிடிப்பை சர்வதேச அளவில் கொண்டு வருதல், கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்குவதற்காக முதலீட்டாளர்களை இணைத்தல், மற்ற பங்கேற்பாளர்களுடன் அறிவைப் பகிர்தல், விருது பெற்ற கண்டுபிடிப்புகளுக்கு முறையான மதிப்பீட்டைப் பெறுதல் மற்றும் சர்வதேச அளவிலான கண்காட்சிகளில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெறுதல் போன்ற பல்வேறு அனுகூலங்களினை வழங்கும் நோக்கத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டது.




பின்வரும் பதினான்கு (14) தொழிநுட்ப துறைகளுடன் தொடர்புடைய வகையில் பாடசாலை, பல்கலைக்கழகம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி, வணிகமயப்படுத்தப்பட்ட மற்றும் திறந்த பிரிவு என 04 பிரதான பிரிவுகளின் கீழ் தேசிய மட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இப் போட்டியில் இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் பங்கேற்கும் வாய்ப்பு உள்ளது.

- பொது பாதுகாப்பு, நலன்புரி மற்றும் தேசிய பாதுகாப்பு
- இரசாயனவியல்
- உணவுத் தொழில் நுட்பம்
- மருத்துவம் மற்றும் மருந்தகவியல்
- பாரம்பரிய மருத்துவம்
- பொது கைத்தொழில் துறை மற்றும் உள்ளகமைப்பு வசதிகள்
- பௌதீகவியல்
- விவசாயம்
- பிரயோக விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம்
- சக்தி
- சுற்றாடல் பேணுகை
- எந்திரவியல்
- தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம்
- போக்குவரத்து

ஒவ்வொரு வெற்றியாளர்களும் தொழில்நுட்பத் துறை கீழ் பட்டியலிடப்பட்டுள்ளனர். மேலும் இந்த கண்டுபிடிப்புகள் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் தகுதி வாய்ந்த நிபுணத்துவக் குழுவால் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

கோவிட்-19 தொற்றுநோய் நிலவும் இந்த சூழ்நிலையிலும், இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது புதிய தொழில்நுட்பத்தைப் பின்பற்றி தனது பணிகளைச் சீராகச் செய்தது. இதன் விளைவாக, முன்னர் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட சஹசக் நிமவும் கண்காட்சியானது மாகாண மட்டங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்நடத்தப்பட்டு அதன் மூலம் நாடளாவிய ரீதியில் சிதறிக் கிடக்கும் படைப்பாற்றல் சமூகங்களை ஒன்றிணைக்கப்பட்டதோடு, நிகழ் நிலை அடிப்படையிலான போட்டியாக நடத்தப்பட்டது.

268 தேசிய கண்டுபிடிப்புகள் மற்றும் 12 சர்வதேச கண்டுபிடிப்புகள் ஆகியவற்றினை கண்டுபிடித்த கண்டுபிடிப்பாளர்கள், "சஹசக் நிமவும் 2021" கண்காட்சிக்கான விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர். நிபுணத்துவ மதிப்பீட்டுக் குழுவால் மதிப்பிடப்பட்ட போட்டியில், சர்வதேசப் பிரிவில் 20 தங்கப் பதக்கங்கள், 29 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 27 வெண்கலப் பதக்கங்களை வென்றவர்கள் அறிவிக்கப்பட்டனர். இதில் சர்வதேசப் பிரிவில்

வெற்றி பெற்றவர்களுக்குப் 7 தங்கப் பதக்கங்களும், 29 வெள்ளிப் பதக்கங்களும்,பதக்கங்களும் வழங்கப்பட்டன. பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை அவர்களது வீடுகளுக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது 2021 ஆம் ஆண்டின் "சஹசக் நிமவும்" தேசிய கண்டுபிடிப்புகள் மற்றும் கண்டுபிடிப்புகள் கண்காட்சி மற்றும் போட்டியின் மூலம் ரூபாய் 250,300/- மற்றும் சர்வதேச போட்டியிலிருந்து US $ 1384 ஆகிய தொகைகளினை ஈட்டியது.

2021 ஆம் ஆண்டின் தேசிய விஞ்ஞான வாரத்துடன் ஒருங்கிணைந்த வகையில், இந்த ஆண்டு, 2020 ஆம் ஆண்டிற்கான "சஹசக் நிமவும்" கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக கண்காட்சி மற்றும் போட்டியில் 04 முக்கிய துறைகளுக்கு "Dasis" விருது வழங்கப்பட்டது.

"சஹசக் நிமவும்" கண்காட்சியானது, புத்தாக்குனர்கள் அவர்களது கண்டுபிடிப்புகளை முன்வைப்பதற்கான சர்வதேச அரங்கை வழங்குகிறது மற்றும் எதிர்கால சவால்களை எதிர்கொள்ளகூடிய வகையில் அன்றாட வாழ்க்கையை எளிதாக்கக்கூடிய தொழில்நுட்ப கருவிகளை உருவாக்குவதன் மூலம் சிறந்த இலங்கையை உருவாக்குவதற்கான வழிமுறையையும் வழங்குகிறது.

## 2.2 புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்தி சுற்றுச் சூழலுக்கு உகந்த மின் உற்பத்தியைக் கண்டறிதல்

- **புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலம் நிலையான மின்சார உற்பத்தி**

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கும், மற்றும் ஆற்றல் நெருக்கடியை தீர்ப்பதற்கும் சுற்றுச்சூழலுக்கு உகந்த தீர்வுகளை கண்டுபிடிக்க இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது முன் முயற்சிகளினை எடுத்துள்ளது. மின்சக்தி அமைச்சு, நிலையான எரிசக்தி அதிகாரசபை, இலங்கை மின்சார சபை மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியன உள்ளூர் கண்டுபிடிப்பாளர்களுடன் இணைந்து இந்த முயற்சிக்கு பங்களித்துள்ளன.

தற்போது, நாட்டின் வருடாந்திர மின் தேவையில் 82%, அதாவது 37.7 GWh, புதுப்பிக்க முடியாத ஆதாரங்களால் வழங்கப்படுகிறது. புதைபடிவ எரிபொருள் எரிப்பு புவி வெப்பமடைதலுக்கு பங்களிக்கிறது மற்றும் குறைந்த வளங்களால் அதன் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே, இந்த முன்மொழியப்பட்ட மின் உற்பத்தி முறை நாட்டிற்கு பல நன்மைகளைக் தரவல்லது. அமைப்பை நிறுவுதல் மற்றும் கொண்டு வருவதற்கான செலவும் குறைவாகவே உள்ளது, என்பதுடன் மின்சாரமானது குறைந்தபட்ச செலவில் உற்பத்தி செய்யப்படுகிறது. மின் நிலையங்களில் இருப்பது போல் அணைகள் போன்ற பெரிய அளவிலான கட்டுமானம் தேவையில்லை என்பது மற்றுமொரு அனுகூலமாகும். உதாரணமாக, கடல் அலைகளில் உள்ள நிலையியல் ஆற்றலானது ஆற்றல் வாயு ஓட்டமாக மாற்றப்படுகிறது, மேலும் இந்த ஆற்றல் மிகவும் திறன் மிகு முறை மூலம் விசையாழிகளை சுழற்றுவதற்கான மின்சாரத்தை உருவாக்க பயன்படுகிறது. எனவே, முன்மொழியப்பட்ட இந்த திட்டமானது மிகவும் திறமையான, நம்பகமான, நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த மின்சார உற்பத்தி செயல்முறையை உள்ளடக்கியதாக இருக்கும்.

நிபுணத்துவ மதிப்பீட்டுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட கண்டுபிடிப்புகளின் முன்மாதிரிகளை உருவாக்க கண்டுபிடிப்பாளர்களுக்கு உதவ வேண்டும் என ஆணைக்குழு எதிர்பார்க்கிறது.

## 2.3 புத்தாக்கங்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கான IAFM-SL (இலங்கைக்கான கண்டுபிடிப்புக்களினை விரைவுபடுத்துவதற்கான நிதி பொறிமுறை) கருத்திட்டம்

IAFM-SL (இலங்கைக்கான கண்டுபிடிப்புக்களினை விரைவுபடுத்துவதற்கான நிதி பொறிமுறை) கருத்திட்டமானது, கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்குவதற்காக வடிவமைக்கப்பட்டது, அமைச்சரவையின் தீர்மானமொன்றின் மூலம், அத்தகைய கண்டுபிடிப்புகளை நேர் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் வருமானம் ஈட்டக்கூடிய வகையில் மாற்றியமைக்கும் பொறிமுறையை அமுல்படுத்துவதற்கு உதவும் பணி இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவிற்கு அதன் சட்டத்தின் மூலம் கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்குவதில் உதவுவதற்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமானது, புத்தாக்குனர்களுக்கு, அவர்களது கண்டுபிடிப்புகளின் நிலையில் இருந்து, இறுதிப் பொருளாக மாற்றி வணிகமயமாக்கல் வரை உதவுவதன் மூலம், தேசிய வருமானத்திற்கு பங்களிப்பு செய்வதாகும். நிதி உதவி மற்றும் கடன்கள் என்பன வழங்கப்பட்ட பின்பு அவை பல நிலைகளில் கண்காணிக்கப்படும்.

2021 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவானது, தேசிய இயந்திரவியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, தேசிய வர்த்தக சபை, FCCISL, இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் போன்றவற்றிலிருந்து பெயர் குறிப்பீடு தொடர்பில் பெறப்பட்ட பரிந்துரைகளில் இருந்து பணிப்பாளர்கள் சபையின் அனுமதியுடன் 2021.01.20 ஆம் திகதியன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.
ஆணைக்குழுவிற்கும் கடனைப் பெற்ற புத்தாக்குனருக்கும் இடையில் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தமானது அதன் சட்டப்பூர்வ செல்லுபடியை உறுதி செய்வதற்காக நேர் அமைச்சின் சட்ட அதிகாரி மற்றும் சட்டமா அதிபர்

திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. புத்தாக்குனர்களுக்கு கடன்கள் வழங்கப்படும் போது, சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து பெறப்பட்ட சாதகமான பதில்களின் படி மேலும் மேம்படுத்தப்பட்ட புதிய ஒப்பந்தத்தைப் 2022 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆண்டு 07 கண்டுபிடிப்புகளுக்கான மதிப்பீடுகள் நிறைவடைந்தன. இது தொடர்பிலான கடன்களின் மொத்த பெறுமதி ரூபாய் 1.2 மில்லியன் ஆகும்.

"உரங்கள் மற்றும் விதைகள்" என்ற கண்டுபிடிப்பின் 30 அலகுகளினை உற்பத்தி செய்வதற்காக கமத்தொழில் அமைச்சிற்கு ரூ.6 மில்லியன் மதிப்புள்ள கடனை இரண்டு தவணைகளில் இது வழங்குகிறது. மேலும் 6.8 மில்லியன் ரூபாய் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மற்றும் ரூபாய் 6.5 மில்லியன் நிதிக் குழுவால் மதிப்பிடப்பட்டுள்ளது. ஆணைக்குழுவானது, 3% உரிமை ஊதிய கொடுப்பனவு என்ற வகையில் ரூபாய் 23,803.00 இனை வருட இறுதியில் ஒதுக்கீடாக கொண்டது.

## 2.4 "Nawa Nipayum Diriya" புத்தாக்கங்களுக்கான வர்த்தக அடிப்படையினை தாபித்தல்.




"Nawa Nipayum Diriya-புத்தாகங்களுக்கான மானியத் திட்டம்" இத் திட்டமானது புத்தாகங்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கு ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்ட இன்னுமொரு திட்டமாகும். சந்தை திறன் கொண்ட கண்டுபிடிப்புகள் நிபுணர்களினை உள்ளடக்கிய ஒரு மதிப்பீட்டுக் குழுவால் மதிப்பீடு செய்யப்படுவதுடன் இது தொடர்பில், அமைச்சின் பிரதிநிதிகளினை உள்ளடக்கிய நிதிக் குழுவிற்கு பரிந்துரைக்கப்படுவதற்கு முன்பு குறிப்பிட்ட கண்டுபிடிப்பானது களப்பரிசோதனை செய்யப்படுகிறது. சோதனை செய்யப்பட்ட துறை அமைச்சகத்தின் பிரதிநிதிகள் இதில் அடங்கும். இந்தக் குழுவால் எடுக்கப்படும் முடிவுகள் பணிப்பாளர் குழுவின் ஒப்புதலுடன் செயல்படுத்தப்படுகின்றன.

"Nawa Nipayum Diriya" மானியத்திட்டத்தின் உதவிகளினை பெற்றுக்கொள்வதற்கான அடிப்படை தகைமைகள் வருமாறு:

1. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. அதி புலமை சொத்து உரிமை கொண்டவராக அல்லது அதற்கு விண்ணப்பித்தவராக இருத்தல் வேண்டும்.
3. ஒரு கண்டுபிடிப்பின் செயல்பாட்டு நிலை முன்மாதிரி/ மாதிரி ஒன்றினை பெறக்கூடியதாக இருத்தல்.
4. கண்டுபிடிப்பு வணிகமயமாக்கலுக்கான சாத்தியக்கூறுகளைக் கொண்டிருக்க வேண்டும் அல்லது சமூகத்தின் நலனுக்காகப் பயன்படுத்தப்பட கூடியதாக இருத்தல் வேண்டும்.
5. ஏற்கனவே வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்கி இருத்தல் வேண்டும். அல்லது வணிகங்களை அமைப்பதற்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

இந்த திட்டத்தில், நிதி உதவியாக வழங்கப்படும் வட்டியில்லா கடன்களை, புத்தாக்குனர் ஒப்புக்கொண்ட காலத்திற்குள் திருப்பிச் செலுத்த வேண்டும். மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், புத்தாக்குனர்கள் பல்வேறு அம்சங்களில் உதவிகளினை பெற்றுக்கொள்வர். அதாவது இறுதி தயாரிப்பு வரை கண்டுபிடிப்பை மேம்படுத்த தேவையான தொழில்நுட்ப உதவியைப் பெற நிதி உதவிகளினை பெறுதல் போன்ற உதவிகளாகும். 2021 ஆம் ஆண்டில், The Nawa Nipayum Diriya நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 13 விண்ணப்பங்கள் பெறப்பட்டன, என்பதுடன் இவை அனைத்தும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

தொழில்நுட்ப மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற நான்கு கண்டுபிடிப்புகளுக்கு கள சோதனை நடத்தப்பட்டதுடன் முன்னர் கள சோதனை செய்யப்பட்ட கருத்திட்டங்களை மதிப்பீடு செய்ய ஐந்து நிதிக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டன.

விதை உலர்த்தியினை முழுமையான மதிப்பீடு செய்த பின்னர் அதன் கண்டுபிடிப்பாளர்களுக்கு ரூ.500,000 கடனாக வழங்கப்பட பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டின் இறுதியில், ரூபாய் 58,177.39/= ஆனது உரிமை ஊதிய கட்டணமாக சேகரிக்கப்பட்டது. இது வணிகமயமாக்கல் செயல்முறையின் 3% ஆகும். கடந்த 10 ஆண்டுகளில் காப்புரிமை பெற்ற கண்டுபிடிப்பாளர்களின் தரவு சேகரிப்பு திட்டத்திற்கு அமைவுற, 5ஆண்டுகளுக்கான தரவுகள் சேகரிக்கப்பட்டன.

## 2.5 புத்தாக்குனர்களுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்க தொழில்நுட்ப அடைகாப்பு மையங்களை தாபித்தல்

இந்த தொழில்நுட்ப அடைகாக்கும் நிலையங்களாவன இலங்கையின் கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்கல் மட்டம் வரை மேலும் மேம்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்கும் நோக்கத்துடன் நிறுவப்பட்டது.

அதன்படி, ஜா-எலயில் ஏகலை எனும் இடத்தில் உள்ள மற்றும் தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திலும் (NREDC) மற்றும் கிளிநொச்சி வளாகத்தில் உள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் இரண்டு தொழில்நுட்ப அடைகாப்பு மையங்கள் நிறுவப்பட்டதுடன், மேலும் இரண்டு மையங்கள் ருஹுணு பல்கலைக்கழகத்திலும் ரஜரட்ட பல்கலைக்கழகத்திலும். முறையே 2021 மற்றும் 2020 ஆண்டுகளில் நிறுவப்பட்டன. நேர் அமைச்சும் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவும் இந்த இரண்டு மையங்களுக்கும் கிட்டத்தட்ட 40 மில்லியன் ரூபாய் பெறுமதியான தொழில்நுட்ப உபகரணங்களை வழங்கியுள்ளன.










## 2.6 புத்தாக்கங்களின் வணிகமயமாக்கலுக்கு தேசிய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை உருவாக்குதல்

- (**இளம் புத்தாக்குனர் - தொழில்முனைவோர் முன்னணி மேம்பாடு -YIELD**)

Siemens Digital Industries என்ற மென்பொருள் நிறுவனத்தின் உள்ளூர் முகவரான வரையறுக்கப்பட்ட PANACEA Solutions தனியார் நிருவகத்துடன் இணைந்து இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, இந்த YIELD திட்டத்தை ஆரம்பித்தது.

இத்திட்டம் பள்ளித் திட்டமாக செயல்படுத்தப்படுகிறது. Product Life Cycle Management (PLM) மென்பொருளைப் பயன்படுத்தி மாணவர்கள் தங்கள் கண்டுபிடிப்புகளை டிஜிட்டல் கணினி வடிவமைப்புகளுக்கு மாற்றுவதற்கான வாய்ப்பைப் பெறுகிறார்கள். இதன் மூலம் மாணவர்களுக்கு புதிய தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சியும் கிடைக்கிறது.

இதன்படி, இந்த திட்டத்தில் மற்றும் முப்பரிமாண modeling இல் இணைவதற்கு ஆர்வமுள்ள 696 புத்தாக்குனர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.





- **இலங்கை புத்தாக்குனர்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கையில் தகவல் தொழில் நுட்ப பிரிவுக்கான பட்டய நிறுவனமான BCS, ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பு**




இந்த நிகழ்ச்சித்திட்டமானது, பொது-தனியார் கூட்டாண்மை அடிப்படையில் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத் துறையில் புதிய கண்டுபிடிப்புக்களினை ஊக்குவிப்பதற்காக. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு மற்றும் இலங்கையில் தகவல் தொழில் நுட்ப பிரிவுக்கான பட்டய நிறுவனமான BCS, ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

தேசிய தகவல் தொடர்பு தொழில்நுட்ப விருதுக்காக இது செயல்படுத்தப்பட்டு வருகிறது, தற்போது, NBQSA 2021 தொடர்பான ஆரம்ப வேலைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்திற்காக முன்வைக்கப்பட்ட அனைத்து கண்டுபிடிப்புகளும் தகுதிவாய்ந்த மதிப்பீட்டுக் குழுவால் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

கோவிட்-19, வெள்ளம் அல்லது வறட்சி போன்ற எந்தவொரு இயற்கைப் பேரிடரையும் கண்டறிய தடுக்க, கட்டுப்படுத்த அல்லது நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான புதிய தகவல்களையும் தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான தயாரிப்புகளையும் கண்டறிவதும் தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில் நுட்பத்தினை அடிப்படையாக கொண்ட கண்டுபிடிப்புகளை வடிவமைக்க புத்தாக்குனர்களினை ஊக்குவித்தலுமே இத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் ஆகும்.

பல்வேறு பிரிவுகளின் கீழ் விருது வென்றவர்கள் தேசிய தகவல் மற்றும் தொடர்பு (NBQSA) விருது வழங்கும் விழாவில் விருதுக்கு உரித்தானவர்கள் ஆவார்கள், மேலும் அவர்கள் சர்வதேச தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில் நுட்ப போட்டிகளில் பங்கேற்கும் அணுகலையும் பெற்றுள்ளனர்.

- **ISC 2021 மாநாட்டிற்காக மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் IEEE EMBS மாணவர் கிளை பிரிவுடன் மூலோபாய கூட்டாண்மை**

ISC 2021 உச்சிமாநாட்டில் உயிரியல்-மருத்துவ பொறியியல் துறையில் கண்டுபிடிப்புகளை மேம்படுத்துவதற்கான மூலோபாய பங்காளி என்ற வகையில் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவம் மற்றும் உயிரியல் மாணவர் பிரிவின் IEEE பொறியியல் பிரிவுடன் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு கரம் கோர்த்துள்ளது. ISC 2021 மாநாட்டின் நோக்கம் இலங்கையில் உயிரியல் மருத்துவ பொறியியல் துறையில் கண்டுபிடிப்புகளை பிரபலப்படுத்துவதற்கு ஆதரவை வழங்குவதாகும்.

உயிரியல் மருத்துவ பொறியியல் தொடர்பான முக்கிய துறைகளை மையமாக வைத்து இந்த மாநாடு நடத்தப்படுகிறது.

- **விவசாயம் தொடர்பான கண்டுபிடிப்புகளின் மதிப்பீடு மற்றும் ஊக்குவிப்புக்கான திட்டம்**

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது விவசாய அமைச்சுடன் இணைந்து "விவசாயத்துடன் தொடர்புடைய கண்டுபிடிப்புகளை மதிப்பீடு செய்தல் மற்றும் ஊக்குவித்தல்" என்ற விடயம் தொடர்பில் ஒரு செயற்திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இத்திட்டமானது, தேசிய உற்பத்தி மற்றும் விவசாயத்தை மேம்படுத்துவதற்காக, விலங்குகளால் ஏற்படும் சேதத்தை குறைத்தல், அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்புகளைக் குறைத்தல், விவசாயத்தை மேம்படுத்த தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்ப பயன்பாடுகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றினை மேம்படுத்தும் பொருட்டு சுற்றுச்சூழலுக்கு உகந்த கரிம மற்றும் இரசாயன உரங்கள் மற்றும் விவசாயத்திற்குரிய இரசாயனங்கள் (பூச்சிக்கொல்லிகள், களைக்கொல்லிகள் மற்றும் ஹார்மோன் சிகிச்சைகள்) மற்றும் விவசாய உபகரணங்கள் ஆகிய துறைகளில் உள்ளூர் கண்டுபிடிப்புகளை மதிப்பீடு செய்து ஊக்குவிக்கிறது.

- **கைத்தொழில்துறை / ஆளணியினரின் ஒத்துழைப்பு**

அரசாங்க நிதியளிப்பு பொறிமுறையின் கருத்தைத் தாண்டி, பொது-தனியார் கூட்டாண்மையுடன் கண்டுபிடிப்புகளின் வளர்ச்சி மற்றும் வணிகமயமாக்கலில் ஆணைக்குழு கவனம் செலுத்துகிறது. அதன்படி, பல கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்குவதற்காக தேசிய அபிவிருத்தி வங்கியுடன் முன்னெடுக்கப்படும் (NDB) தற்போதைய திட்டம் வெற்றிகரமாக நடத்தப்படுகிறது.

சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் நட்பு வகைகளைப் பாதுகாகக்கூடிய பல கண்டுபிடிப்புகளுக்கு ஆணையம் உதவி வழங்க முடியும், அரசாங்க நிதியைப் பயன்படுத்தாமல் அதி புலமை சொத்துரிமைகளைப் பாதுகாப்பதோடு. இந்த வகையில், 25 புத்தாகங்களுக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், புத்தாக்குனர்களின் வேண்டுகோளின் பேரில் இந்த கண்டுபிடிப்புகள் தேசிய அபிவிருத்தி வங்கியின் (NDB PLC) கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இந்த எட்டு கண்டுபிடிப்புகளை மதிப்பிட்ட பின்பு, வங்கியானது ஒவ்வொரு கண்டுபிடிப்புக்கும் 2021 ஆம் ஆண்டில் ரூபாய். 300,000/- இனை நிதி உதவியாக வழங்க ஒப்புக்கொண்டது. மற்ற கண்டுபிடிப்புகளும் 2022 ஆம் ஆண்டில் பரிசீலிக்கப்படும்.

## 2.7 இளம் கண்டுபிடிப்பாளர்கள் சங்கங்களை நிறுவுதல் - இலங்கையின் புத்தாக்க கலாச்சாரத்தை முன்னேற்றுவதற்கான வழி

இலங்கையின் கண்டுபிடிப்புகளின் வளர்ச்சியை எளிதாக்குவதற்கும் ஊக்குவிப்பதற்கும் முன்னோடியாகச் செயற்படும், இலங்கையின் புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு, இலங்கையில் புதுமையான கலாச்சாரத்தை உருவாக்கும் பெரும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன்படி பள்ளி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் மூன்றாம் நிலை கல்வி நிறுவனங்களின் மாணவர்களிடையே ஒரு புத்தாக்க கலாச்சாரத்தை உருவாக்குவதற்கு புத்தாக்குனர் சங்கங்களை நிறுவுவதற்கான திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இந்த முயற்சிக்கு பல்வேறு தரப்பினரின் பங்களிப்பைப் பெறுவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், 2020 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சுடன் இணைந்து நாடளாவிய ரீதியில் 39 தொழில்நுட்பக் கல்லூரிகளை உள்ளடக்கி 270 இற்கும் மேற்பட்ட இளம் புத்தாக்குனர் சங்கங்கள் நிறுவப்பட்டன. 2021 ஆம் ஆண்டில், ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில் 450 பாடசாலைகளில் இளம் புத்தாக்குனர் சங்கங்கள் நிறுவப்படும் என்பதுடன் ரூபாய் 10,000.00 நிதி உதவியாக இந்த சங்கங்களுக்கு வழங்கப்படும்.

மேலும், 2021 ஆம் ஆண்டில் இந்த திட்டத்திற்கு நிதி உதவி வழங்க மக்கள் வங்கி தயாராக உள்ளது, என்பதுடன் இந்த பங்களிப்பு ரூபாய் 2 மில்லியன் ஆகும்.

பல்கலைக்கழக மாணவர்களின் புத்தாக திறனை மேம்படுத்துவதற்காக பல்கலைக்கழகங்களில் புத்தாக்குனர் சங்கங்களை நிறுவுவதற்கான ஒரு புதிய திட்டம் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது.








**“Nipayumani” புத்தாக்குனர் சங்கங்களை ஊக்குவிக்க**

பாடசாலை மட்ட புத்தாக்க யோசனைகளை சந்தை வாய்ப்புள்ள புத்தாக்கமாக அபிவிருத்தி செய்வதற்காக புத்தாக்குனர் சங்கங்களுக்குள் தொழில்நுட்பம் மற்றும் அறிவைப் பகிர்ந்து கொள்வதற்காக இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவில் " கருத்துக்கள் அடைகாப்பகம் (idea incubators) " என்ற தளத்தை உருவாக்க ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தொலைக்காட்சி வசதிகளுடன் கூடிய அரங்கம் ஒன்றின் மூலம் அறிவைப் பரப்புவதற்கான "Nipayumani" என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது மாணவர்கள், கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் வளவாளர்கள் பல்வேறு துறைகளில் அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு தளமாகும்.

YouTube மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் புத்தாக்கங்கள் மற்றும் பல வேறுபட்ட துறைகள் தொடர்பில் தயாரிக்கப்பட்ட கட்புல நாடாக்கள் பற்றிய அறிவைப் பரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்த YouTube அலைவரிசைகளில் 100க்கும் மேற்பட்ட கட்புல நாடாக்கள் மற்றும் 1000 சந்தாதாரர்கள் உள்ளனர்.

புத்தாக்க கலாச்சாரத்தை மேம்படுத்துதல், வளவாளர்களின் வழிகாட்டுதல், கண்டுபிடிப்புகள் குறித்த பொதுமக்களின் விழிப்புணர்வு, புதிய தொழில்நுட்ப அறிவை வழங்குதல், பாடசாலை மாணவர்களிடையே அறிவு இடைவெளியைக் குறைத்தல் உள்ளிட்ட பல நன்மைகளை இது கொண்டுள்ளது.






## 2.8 தேசிய மற்றும் சர்வதேச அளவில் அதிபுலமை சொத்துரிமையை பாதுகாக்க புத்தாக்குனர்களுக்கு உதவுதல்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, இலங்கை கண்டுபிடிப்பாளர்களுக்கு தொழில்நுட்ப உதவி மற்றும் பிற தொடர்புடைய சேவைகளை வழங்குவதன் மூலம் அவர்களின் அதி புலமை சொத்துரிமைகளினை உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அவர்களின் புத்தாக்க திறன்களை முறையற்ற முறையில் கையாளுவதைத் தடுப்பதன் மூலம் அவர்களின் அறிவுசார் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் தனது அதிகபட்ச ஆதரவை வழங்கியுள்ளது.

அத்தகைய சேவையை வழங்குவதற்காக உலக அதி புலமை சொத்து அலுவலகம் மற்றும் தேசிய அதி புலமை சொத்து அலுவலகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் நடத்தப்படும் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க ஆதரவு மையத்தின் (TISC) மூலம் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டில் காப்புரிமைக்கு விண்ணப்பித்தல் தொடர்பில் புத்தாக்குனர்களுக்கு அளிக்கப்பட்ட ஆதரவுகள் பற்றிய புள்ளிவிவரத் தரவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது;

காப்புரிமை உரிமைகள் தொடர்பில் ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களின்
மொத்த எண்ணிக்கை - 11

காப்புரிமைக்கான விண்ணப்பம் தொடர்பில் வழங்கப்பட்ட உதவிகளின் எண்ணிக்கை - 16

ஆணைகுழுவினால் உதவி செய்யப்பட்ட காப்புரிமை விண்ணப்பங்களின் எண்ணிக்கை - 38

சர்வதேச சொத்து உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலமும் காப்புரிமைகளுக்கு விண்ணப்பிப்பதற்கான நிதி உதவிகளை வழங்குவதன் மூலமும் உள்ளூர் மற்றும் சர்வதேச மட்டங்களில் வருடாந்தம் விண்ணப்பிக்கும் காப்புரிமைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு ஏற்கனவே திட்டமிட்டுள்ளது.

அதன்படி, 2021 ஆம் ஆண்டில் மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் 08 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மற்றும் காப்புரிமை விண்ணப்பம் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து இரண்டு நிகழ்நிலை அடிப்படையிலான நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதுடன் கமச் செய்கை அமைச்சுடன் இணைந்து காப்புரிமை உரிமைகள் பற்றிய பயிற்சி பட்டறை ஒன்று நடத்தப்பட்டது. கமச் செய்கை அமைச்சுடன் இணைந்து நடத்தப்படும் காப்புரிமை வரைவுக்கான பட்டறையின் மூலம் 38 புத்தாகுனர் பயனடைந்தனர்.

### சர்வதேச காப்புரிமைக்கு விண்ணப்பிப்பதை ஆதரிக்கும் முறை

இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு, புத்தாக்குனர் பணம் செலுத்துவதற்கான சான்றுகள் மற்றும் சமூக, பொருளாதார, சுற்றுச்சூழல் அல்லது கண்டுபிடிப்பின் மூலம் நாட்டிற்கு சலுகை பெற்ற பிற நன்மைகளை உள்ளடக்கிய ஏற்றுக்கொள்ளக்கூடிய முதலீட்டுத் திட்டத்துடன் எழுத்துப்பூர்வமாக கோரிக்கையை ஆணைகுழுவிற்கு அனுப்ப வேண்டும்.

## 2.9 நடப்பு சமூக பிரச்சனைகளுக்கு புது முறையில் தீர்வுகள்

- **புது முறையிலான தீர்வுகளின் மூலம் மனித-விலங்கு மோதல்களைக் குறைப்பதற்கான திட்டங்கள்**

தற்போது பொதுவான பிரச்சினையாக மாறியுள்ள மனித விலங்கு மோதலைத் தீர்க்க ஆணைககுழு இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

மனித-விலங்கு மோதலால் தேசிய பொருளாதாரம் பெரும் இழப்பை சந்திக்கிறது. இந்த மோதலைக் குறைப்பதற்காக தொழில்நுட்ப உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் பெரும் தொகையைச் செலவிட வேண்டியுள்ளது. எனவே, புதிய கண்டுபிடிப்புக்கள் மூலம் தேசிய பொருளாதாரத்தை உயர்த்தும் அதே வேளையில், இந்த மனித-விலங்கு மோதலுக்கு நீண்டகால, நிலையான தீர்வை வழங்குவதற்காக ஆணைக்குழு இந்த திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் மின்சார வேலிகள் (யானை வேலி) மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் போன்ற செயற்பாடுகள் உள்ளடங்கலாக பல பாதுகாப்பு நிகழ்ச்சிசி திட்டங்களினை முன்னெடுப்பதில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு, வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம், இலங்கை மகாவலி அதிகாரசபை, திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு ஆகியன சம்பந்தப்பட்டு இருப்பதோடு, இந்த கருத்திட்டத்தில் இராஜாங்க வன அமைச்சு முக்கிய பங்கினை வகிக்கிறது.

நடைமுறையில் பயன்படுத்தக்கூடிய கண்டுபிடிப்புகளின் முன்மாதிரிகளை வடிவமைத்து உருவாக்க ஆணைக்குழு உதவியுள்ளது. மேற்கூறிய நிறுவனங்களின் நிதி உதவியுடன் இந்த முன்மாதிரிகள் நிறுவப்பட்டன. இவை களப்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்பு, இத்திட்டங்கள் மூலம் வெற்றிகரமான கண்டுபிடிப்புகளை ஆணையகுழுவினால் கண்டறிய முடிந்தது.

இத்திட்டத்தின் மூலம் அடையாளம் காணப்பட்ட கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தி மகாவலி வலயங்களில் மனித-விலங்கு மோதலை குறைக்க பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. தேசிய கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்குதல் மற்றும் விவசாயம் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்படும் இழப்புகளால் தேசத்திற்கு நேரிடையாகவும் மறைமுகமாகவும் ஏற்படும் இழப்புகளை குறைத்தல் என்பன இதன் முக்கிய நோக்கங்களாகும்.

தேசிய கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தி இலங்கை மகாவலி அதிகாரசபையுடன் இணைந்து ஆணைக்குழுவினால் மகாவலி "சி" மற்றும் "பி" வலயங்களில் முதற்கட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்ட முன்னோடித் திட்டங்கள் தற்போது வெற்றிகரமாகச் செயற்பட்டு வருகின்றன.

மகாவலி "பி" வலயத்திலுள்ள இரண்டு பிரதான விதைப்பண்ணைகளான அரலகங்வில விதைப்பண்ணை மற்றும் இரத்கிந்தா பயிற்சி நிலையத்தைச் சுற்றி முறையே 7.5 கி.மீ மற்றும் 9.8 கி.மீ நீளத்திற்கு மின்சார வேலியை பூர்த்தி செய்து தேசிய புத்தாக்குனர்கள் மாபெரும் சாதனையைப் பெற்றுள்ளனர்.

இந்தத் திட்டங்களுக்கு மேலதிகமாக, மகாவலி "எல்" மற்றும் "சி" வலயங்களில் மேலும் பல திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டமை தேசிய சாதனையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

- **யானைகளுக்கான "Radio collars"**

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது,புத்தாக்குனர்களுக்கு சேய்மை உணரி, மின்கலம் மூலம் இயக்கப்படக்கூடிய மற்றும் இரட்டை அதிர்வெண் உடைய ***யானைகளுக்கான*** *"Radio collars"* இனை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு தேவையான வழிகாட்டல்களினையும் அவற்றுக்கு தேவையான பொருட்களினை அவர்களுக்கு வழங்குவதற்கும் முனைந்துள்ளது. இந்த நீர் உட்புகாத , அதிர்வுகள் இல்லாத இந்த *"collars"* மூலம் விலங்குகளின் செயல்பாடுகளை கண்டறிய முடியும்.




உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் இந்த காலர்கள் இந்த ஆண்டு நாட்டுக்கு சுமார் 375,000 அமெரிக்க டொலர்களை சேமித்து தருகின்றன என்பதுடன் மேலும் வனவிலங்கு திணைக்களமானது 50 *"Radio collars"* கொள்வனவு செய்ய ஒப்புக்கொண்டுள்ளது.




- **"Zero to Hero" கருத்திட்டம்**

தேசிய மட்டத்தில் உள்ள கண்டுபிடிப்பாளர்களை தொழில் முனைவோர்களாக மாற்றுவதற்காக இந்த இத்திட்டத்தை ஆணைக்குழு நடைமுறைப்படுத்தியுள்ளது. இந்தத் தொடர் திட்டங்கள், கண்டுபிடிப்புகள் மூலம் தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கண்டுபிடிப்பாளர்களுக்கான சந்தை வாய்ப்புகளைக் கண்டறிதல், முதலீட்டாளர்களுக்கு அறிமுகபடுத்துவதன் மூலம் கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்குதல் மற்றும் மின்னணு மற்றும் அச்சிடப்பட்ட ஊடக பிரச்சாரங்களின் உதவியுடன் கண்டுபிடிப்புகளை சரியான சமூகமயமாக்கல் ஆகியவை இத்திட்டத்தின் மூலம் முன்நெடுகப்படவுள்ள நோக்கங்களாகும்.

வேலை வாய்ப்புகளை உருவாக்கும் அதே வேளையில், தேசிய பொருளாதாரத்துடன் திறம்பட இணைக்கப்பட்ட புதிய நிறுவனங்களைத் தொடங்குவதற்கு ஆணைக்குழு உதவி வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் மூன்று நிறுவனங்களைத் தொடங்குவதற்கான வழிகாட்டுதல்களையும் உதவிகளையும் ஆணைக்குழு வழங்கியுள்ளது.






- **புது முறையில் கழிவு மறுசுழற்சி திட்டம் - WMA உடன் ஒரு கருத்திட்டம்**

தற்போது, விவசாயமானது, பிரதானமாக பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகள் போன்ற இரசாயன பசளைகள் மற்றும் வேளாண்மை இரசாயனங்களை சார்ந்துள்ளது. இந்த விவசாய இரசாயனங்களின் அதிக பயன்பாடு சுற்றுச்சூழலை பாதிப்பதோடு அதனால் ஏற்படும் செலவினம், அரசாங்கத்திற்கு ஒரு சுமையாக உள்ளது.

இந்த அனைத்து காரணிகளையும் கருத்தில் கொண்டு, கழிவு முகாமைத்துவ ஆணைக்குழுவின் (WMA-WP) ஒத்துழைப்புடன், உள்ளூர் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் நிலையான சுற்றுச்சூழல் மேலாண்மைக்கான திட்டத்தை ஆணைகுழு தொடங்கியுள்ளது. இத்தகைய கண்டுபிடிப்புகளை மேலும் சோதனை செய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் ஒரு தளத்தை உருவாக்கும் பணியில் இந்த திட்டம் உள்ளது. இதன்படி, பெட்டியகந்தவிலுள்ள "mihisaru" வள முகாமைத்துவ நிலையத்தில் இந்த வேலைத்திட்டம் மையப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. என்பதுடன் இந்த நிலையமானது இரசாயன உரங்களுக்கு மாற்றாக இருக்கும் சுற்றுச்சூழல் நட்பு கரிம உரங்களை உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்துகிறது அத்துடன் கண்டுபிடிப்பாளர்களுக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஆணைகுழு வழங்குகிறது.

- **இலங்கையில் தேயிலை கைத்தொழில்துறையினை விருது செய்வதற்கு "தேநீர் கலந்துரையாடல் " ("Tea Talk") நிகழ்ச்சித்திட்டம்**

இலங்கையில் தேயிலை கைத்தொழில் என்பது, தேசிய பொருளாதாரத்திற்கு நேரடியாக பங்களிக்கும் ஒரு பயனுள்ள மற்றும் முக்கியமான துறையாகும். எனவே, தேயிலை கைத்தொழிலை இலக்காகக் கொண்டு பயனுள்ள மற்றும் புது முறையான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது.

அதன்படி, இதன் முதற்கட்டமாக தேயிலை கைத் தொழிலை பாதிக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் "**தேநீர் கலந்துரையாடல்**" என்ற திட்டத்தை செயல்படுத்த ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

சந்தைக்கு அத்தகைய தீர்வுகளை அறிமுகப்படுத்தும் அதே வேளையில், தேயிலை தொழிற்துறையின் பிரச்சினைகளுக்கு புது முறையான தீர்வுகளை வழங்குவதே திட்டத்தின் நோக்கமாகும். தேயிலை தொழிற்துறையை பாதிக்கும் தொழில்நுட்ப சிக்கல்களாவன, தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களுடன் தொடர்புற்று இனம் காணப்பட்டதோடு, புத்தாக்குனர்களுடன் தொடர்புற்று அவற்றுக்கு புது முறையில் தீர்வுகள்

தேடப்படுகின்றன. இந்த புது முறையான தீர்வுகள் ஆணைக்குழுவின் ஆதரவுடன் துறையில் உள்ள நிபுணர்களினால் மதிப்பிடப்பட்டு, கண்டுபிடிப்புகளின் தரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.அதன்பிறகு, சரியான முறையில் உருவாக்கப்பட்ட கண்டுபிடிப்புகள் ஆணைக்குழுவின் வழிகாட்டுதலின் பேரில், கண்டுபிடிப்பாளர்களுடனும் தொடர்பு கொண்டு பின் வணிகமயமாக்கப்படுகின்றன.

**“தேநீர் கலந்துரையாடல்“** இன் முதற் கட்ட நடவடிக்கையாக தொழில்துறையில் ஈடுபட்டுள்ள தொழிலதிபர்களிடம் தொழில்நுட்ப சிக்கல்கள் கண்டறியப்பட்டு, இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க கண்டுபிடிப்பாளர்களிடம் இருந்து புது முறையான தீர்வுகள் கோரப்படுகின்றன. இந்த புது முறையான கண்டுபிடிப்புக்கள் இத் துறையினை சார்ந்த நிபுணர்களினால் மதிப்பீடு செய்யப்பட்ட பின் அவற்றின் தரத்தை மேம்படுத்த ஆணையம் நடவடிக்கை எடுக்கிறது. அதன்பிறகு, சரியான முறையில் உருவாக்கப்பட்ட கண்டுபிடிப்புகள் ஆணைக்குழுவின் வழிகாட்டுதலின் பேரில், கண்டுபிடிப்பாளர்களுடனும் தொடர்பு கொண்டு பின் வணிகமயமாக்கப்படுகின்றன.

இலங்கை தேயிலை சபையின் அனுசரணையுடன் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த **“தேநீர் கலந்துரையாடல்“** நிகழ்ச்சியானது தொடர் நிகழ்ச்சிகளாக ஒளிபரப்ப திட்டமிடப்பட்டுள்ளது.

- **கொவிட் - 19 இற்கு எதிராக போராட்டம் தொற்றினை தணிக்க புது வகையை சார்ந்த முறைகளினை விருத்தி செய்வோம்**

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, நாட்டிற்குள் பரவிவரும் "கொவிட் -19" தொற்றுநோயைத் புது முறை தீர்வுகள் மூலம் தணிக்கும் நோக்கத்துடன் "COVID 19 க்கு எதிரான போராட்டம்" திட்டத்தை அறிமுகப்படுத்தியதோடு புது முறைகள் மூலம் பிரச்சினைக்கு முகங்கொடுக்கும் தீர்வுகளைத் தேடுகிறது. தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட வணிகங்களைத் தொடரவும், தேசியப் பொருளாதாரத்தில் அவர்களின் பங்களிப்பைப் பெறவும் இது ஒரு வலுவான அடித்தளமாக இருந்தது. அதன்பிறகு, சரியான முறையில் உருவாக்கப்பட்ட கண்டுபிடிப்புகள் ஆணைக்குழுவின் வழிகாட்டுதலின் பேரில், கண்டுபிடிப்பாளர்களுடனும் தொடர்பு கொண்டு பின் வணிகமயமாக்கப்படுகின்றன.

2021 ஆம் ஆண்டில், நான்கு (4) கண்டுபிடிப்புகளை சமூகமயமாக்க ஆணைகுழு நடவடிக்கை எடுத்துள்ளது. [Microorganism Diverting and Clearing Device, Video Laryngoscope, Microorganism Destroying & Air Filtering Unit, and Smooth Lateral Patient Transfer Apparatus (Bed Trolly)] இது "கொவிட்-19" ஐ முடிவுக்குக் கொண்டு வருதல்" என்ற அரசாங்க கருப்பொருளின் கீழ் கொவிட்-19க்கு எதிரான போராட்டத்திற்கு ஆதரவானதாக அமைகிறது. இந்த நிகழ்வில்,நேர் அமைச்சின் இராஜாங்க அமைச்சர் திருமதி (வைத்தியர்) சீதா அரம்பேபொல, உற்பத்தி, வழங்கல் மற்றும் மருந்து ஒழுங்குமுறை அமைச்சின் இராஜாங்க அமைச்சர், பேராசிரியர் சன்ன ஜயசுமண, இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் ஆணையாளர் பேராசிரியர் என்.எம்.எஸ்.சிறிமுத்து, ஆணைக்குழுவின் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி என்.என்.டபிள்யு.தொலவத்த மற்றும் ஊடக அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.








## 2.10 ஆராய்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கான சர்வதேச மாநாடு (“புத்தாக்கத்திலிருந்து அதன் தாக்கம் வரை - FITI” 2021)

கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்க, புதிது கண்டுபிடிக்கும் திறன் சரியாக ஊக்குவிக்கப்பட்டு சமூகமயமாக்கப்பட வேண்டும். இந்த இலக்கை அடைய, கண்டுபிடிப்புகள் அதனை உருவாக்கும் கண்டுபிடிப்பாளர்களுக்கு மட்டும் கட்டுப்படுத்தப்படாமல் சர்வதேச அளவில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.ஆதலினால்,கண்டுபிடிப்பாளர்களுக்கு அவர்களின் கண்டுபிடிப்புகளை பிரபல்யப்படுத்தவும் , கண்டுபிடிப்புகள் பற்றிய ஆய்வு மற்றும் ஆராய்ச்சி தேவைகளுக்கான வழிகாட்டுதலைப் பெறுவதற்கு வாய்ப்பளிக்கும் முகமாகவும்,

சர்வதேச மாநாடான "புத்தாக்கத்திலிருந்து அதன் தாக்கம் வரை (FITI) 2019" ஆனது இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்றது. இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தின் (SLAAS) ஒத்துழைப்புடன் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததோடு, FITI 2020 மாநாடானது, 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8 ஆம் திகதியன்று பண்டாரநாயக ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.




ஆராய்ச்சியாளர்களுக்கு அவர்களது ஆராய்ச்சியை உலக அங்கீகாரம் பெற்ற "IEEE" இதழான SCOPUS இல், வெளியிட அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும், என்பதோடு அது அவர்களுக்கு மிகவும் முக்கியமானதாகும். இந்த நிகழ்வில், ஏறத்தாழ 30 ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டன, மேலும் கண்டுபிடிப்பாளர்கள் "ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கண்டுபிடிப்புகளின் சமூக தாக்கம்" என்ற முக்கிய தலைப்பில் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்கும் வாய்ப்பைப் பெற்றனர். இவை தேசிய மற்றும் சர்வதேச நிபுணர்களைக் கொண்ட நிபுணத்துவ மதிப்பீட்டுக் குழுவால் மதிப்பீடு செய்யப்படுகின்றன.





இங்கிலாந்து குயின்ஸ் பல்கலைக்கழகத்தின் பௌதீக இரசாயனவியல் துறையில் நிபுணரான பேராசிரியர் ஸ்டீவன் பெல் சிறப்புரை ஆற்றியதுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மின் மற்றும் மின்னணுவியல் பீட பேராசிரியர் அற்புதராஜா அருளம்பலமும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டார்.

## 2.11 கருத்து அடைகாப்பகம் (கருத்துக்களினை உருவாக்கும் அரங்கம்)

கருத்து அடைகாப்பகம் என்பது கண்டுபிடிப்பாளர்களின் ஆக்கபூர்வமான யோசனைகளை வணிக ரீதியாக உருவாக்கக்கூடிய தயாரிப்புகளாக மாற்றும் நோக்கத்துடன் ஆணைகுழுவின் வளாகத்தில் நிறுவப்பட்ட ஒரு அரங்கம் ஆகும். சகல உபகரணங்களையும் கொண்ட அரங்கம்/ தொலைக்காட்சி வசதிகள் கண்டுபிடிப்புகளை வடிவமைக்கும் கணினி தொழில்நுட்பம் மற்றும் 80க்கும் மேற்பட்ட பார்வையாளர் திறன் கொண்ட உற்பத்தி வசதிகள் ஆகியவற்றைக் கொண்ட கேட்போர் கூடத்தினை கொண்டுள்ளது.

## 2.12 கண்டுபிடிப்பாளர்களுக்கு வழங்கப்படும் விசேட சேவைகள்

- இரு கண்டுபிடிப்பாளர்களுக்கு அவர்களது கண்டுபிடிப்புக்களின் சோதனைகள் தொடர்பில் தொடர்வதற்கு கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு (ITI) பரிந்துரைக்கப்பட்டனர்.
- கண்டுபிடிப்பின் மூலவகை மாதிரியானது விருத்தி செய்யப்படுவதற்கு இரு கண்டுபிடிப்புக்கள் தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்திற்கு (NERD) பரிந்துரைக்கப்பட்டது.
- கண்டுபிடிப்புக்களின் சோதனைகள் தொடர்பில் தொடர்வதற்குஒரு கண்டுபிடிப்பானது தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகத்திற்கு (NIFS) பரிந்துரைக்கப்பட்டது.
- இரு கண்டுபிடிப்புக்கள், மூலவகை மாதிரியானது விருத்தி செய்யப்படுவதற்கும் மற்றும் சோதனைகள் தொடர்பில் தொடரப்படுவதற்கும் நிலையான சக்தி அதிகாரசபைக்கு பரிந்துரைக்கப்பட்டது.
- ஒரு புத்தாகமானது சர்வதேச மட்டத்தில் அறிமுகப்படுத்தப்படுவதற்காக வரி சலுகை செய்யப்படுவதன் ஊடாக இலங்கை புத்தாகுனர் ஆணைக்குழுவிற்கு ஆதரவு வழங்கப்பட்டது.
- ஒரு புத்தாக்கத்துடன் சம்பந்தப்பட்ட கருவி சுங்கத்தில் இருந்து விடுவிப்பு செய்யப்பட்டதன் மூலம் இலங்கை புத்தாகுனர் ஆணைக்குழுவிற்கு ஆதரவு வழங்கப்பட்டது.
- 22 புத்தாகங்களுக்கு மூலவகை மாதிரியானது விருத்தி செய்யப்படுவதற்கு துணையாக இருந்ததன் மூலம் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு ஆதரவு வழங்கப்பட்டது.

## 2.13 புத்தாக்குனர் முன்னரங்கு

புத்தாக்குனர்களுக்கு அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நேரடியாக முன்வைக்கவும், அவர்களின் பிரச்சினைகளை கலந்துரையாடவும், அவற்றைத் தீர்க்கவும் இந்த முன்னரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டினது புத்தாக்குனர் முன்னரங்கானது, டிசம்பர் 28, 2021 அன்று ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் (HARTI) 65 கண்டுபிடிப்பாளர்களின் பங்கேற்புடன் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

## 2.14 சர்வதேச அங்கீகரிப்பு

The International Federation of Inventors Association (IFIA) and the World Inventions and Intellectual Property Association (WIIPA), the two major international organizations concerned with inventions and innovations, are both members of the Sri Lanka Inventors Commission. புத்தாக்குனர்களின் சர்வதேச கூட்டமைப்பு சம்மேளனம் (IFIA) மற்றும் உலக புத்தாக்கங்கள் மற்றும் அதிபுலமை சொத்து சம்மேளனம் ஆகிய இரண்டு முக்கிய சர்வதேச அமைப்புகளும் இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளன. இதன் மூலம் ஆணைக்குழு தனது சர்வதேச உறவுகளை மேலும் விரிவுபடுத்துகிறது.

இந்த கூட்டமைப்புக்களில் உறுப்பினராக இருப்பதன் மூலம் இளம், திறந்த மற்றும் மகளிர் போன்ற பல்வேறு பிரிவுகளின் கீழ் பல சர்வதேச கண்டுபிடிப்பு போட்டிகளில் பங்கேற்க ஆணைக்குழு சிறந்த வாய்ப்பைப் பெற்றது. இந்த கூட்டமைப்புக்களாவன பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல், கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்குதல், அதி புலமை சொத்துரிமைகளை பாதுகாத்தல், சுற்றுச்சூழலுக்கு உகந்த கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல் மற்றும் கண்டுபிடிப்புகளை பிரபலப்படுத்துதல் போன்ற சேவைகளை வழங்குகின்றன. மேலும் அவர்கள் தங்கள் செயல்பாடுகளுடன் தொடர்புடைய தகவல்களைப் பரப்பல்; இணையதளங்கள் மற்றும் பத்திரிகைகள் மூலம் செயல்படுத்தப்படும் கண்டுபிடிப்புகள் மற்றும் திட்டங்களை பிரபலப்படுத்துதல் மற்றும் கண்டுபிடிப்புகளுக்கு பதக்கங்கள் மற்றும் ரொக்கப் பரிசுகளை வழங்குதல்.போன்ற விடயங்களில் ஈடுபட்டுள்ளனர்.

விமான பயண சீட்டுக்களுக்கான அனுசரணை செய்தல், தங்குமிடம் மற்றும் கண்டுபிடிப்பு கண்காட்சிகளுக்கு பதிவு செய்தல் மற்றும் கண்காட்சி சாவடிகள் மற்றும் போக்குவரத்து வசதிகளை சலுகையில் வழங்குவதன் மூலம் ஆணைகுழு அவர்களுக்கு ஆதரவளிக்கிறது. உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் தங்கள் கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்க விரும்பும் கண்டுபிடிப்பாளர்களுக்கு இந்த வகையான ஊக்கத்தொகைகள் மற்றும் அங்கீகாரம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். "சஹசக் நிமவும்" கண்காட்சி மற்றும் போட்டியின் விருது வென்றவர்கள் இந்த சர்வதேச கூட்டமைப்புக்களின் அனுசரணையின் கீழ் சர்வதேச கண்டுபிடிப்பாளர் போட்டிகளில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளனர்.

## 2.15 தேசிய புத்தாக்குனர் தினம்

கண்டுபிடிப்பாளர்களின் பங்கு மற்றும் நாட்டின் பொருளாதாரத்தில் அவர்களின் பங்களிப்பைப் பாராட்டுவதற்காக அமைச்சரவையின் ஒப்புதலின் கீழ் ஒவ்வொரு ஆண்டும், அக்டோபர் மாதம் 26 ஆம் தேதி தேசிய புத்தாக்குனர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக்குழுவின் முதலாவது ஆணையாளரும் நிபுணத்துவம் மிகு பொறியாளரும் தேசபந்து கலாநிதி ஏ.என்.எஸ்.குலசிங்க அவர்கள் ஆற்றிய பாராட்டுக்குரிய சேவைக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இந்த நாள் அவரது பிறந்த நாளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

**தேசிய புத்தாக்குனர் தினத்தின் குறிக்கோள்கள்**

- கண்டுபிடிப்பாளர்களை மதிப்பிடுவதற்கான புதிய நடைமுறையை உருவாக்குதல் மற்றும் அவர்களை கண்டுபிடிப்புக்களினை ஊக்குவிப்பதன் மூலம் புதுமையான பொருளாதாரத்தை நோக்கி நாட்டை வழிநடத்துதல்.
- புதிய முதலீட்டு வாய்ப்புகளில் கண்டுபிடிப்பாளர்களின் கவனத்தை ஈர்க்க தேசிய கண்டுபிடிப்பாளர்கள் தினத்தை பிரகடனப்படுத்தல்.
- கண்டுபிடிப்புகள் மூலம் அபிவிருத்தி மிகு பொருளாதாரத்தை உறுதிப்படுத்த இலங்கை கண்டுபிடிப்பாளர்களுக்கு முன்னுரிமை வழங்கல்.
- கண்டுபிடிப்பாளர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கான வாய்ப்பை ஆணைக்குழு பெறுகிறது.
- விருது பெற்ற கண்டுபிடிப்பாளர்களை அடையாளம் காணல்.

## 2.16 புத்தாகங்களினை பிரபல்யப்படுத்தல்

- **"இலங்கை புத்தாக்குனர்கள்" -YouTube அணுகல்**

இந்த வணிகமயமாக்கல் செயல்முறைக்கு தேசிய மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களின் உதவியை இலக்காகக் கொண்டு, புதிய தொழில்நுட்பங்களுடன் முன்னோக்கிச் செல்வதற்கான பின்னணியை வழங்குவதற்காக, வணிகமயமாக்கலுக்கான சாத்தியமுள்ள கண்டுபிடிப்புகளை பிரபல்யப்படுத்த இந்த புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த YouTube அலைவரிசை கண்டுபிடிப்பாளர்களுக்கு புது கண்டுபிடிப்புக்களினை பற்றி அறிந்து கொள்ளவும், எந்த நேரத்திலும் விரைவாக காப்புரிமைக்கு விண்ணப்பிக்கும் செயல்முறையைப் பற்றிய புரிதலைப் பெறவும் வசதிகளை வழங்குகிறது.

- **உத்தியோகபூர்வ வலைத்தளம்**

பயனுள்ள தகவல்களை உள்ளடக்கியதாய் புதிய முன்னுரையுடன் இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ வலைத்தளம் இப்போது கிடைக்கிறது. கண்டுபிடிப்பாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் புத்தாக்கங்களில் ஆர்வமுள்ள இலங்கை சமூகத்திற்கு பரந்த சேவையை வழங்குவதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் துறையின் பிரச்சினைகளுக்கு புது முறையான தீர்வுகளை தேடுபவர்கள், ஆணைக்குழுவின் ஒருங்கிணைப்பு மூலம் கண்டுபிடிப்பாளர்களுடன் இணைவதற்கான வசதிகள் இந்த இணையத்தளத்தின் விசேட அம்சமாகும்.

## 2.17 ஊடக பிரச்சாரம்

இலங்கையில் ஒரு கண்டுபிடிப்பு கலாச்சாரத்தை வளர்ப்பதற்காக உள்ளூர் கண்டுபிடிப்புகளை பிரபலப்படுத்துவதற்கான தேவையை பூர்த்தி செய்ய ஊடக பிரச்சாரங்களுக்கு முக்கிய பங்கு வழங்கப்படுகிறது. இதன் விளைவாக, இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது புத்தாக்கங்களினை பிரபல்யப்படுத்துவதற்கு டிஜிட்டல், அச்சிடப்பட்ட மற்றும் சமூக ஊடக நிறுவனங்களின் தன்னார்வ ஆதரவைப் பெற அவர்களுடன் இணைகின்றது.

எந்தவொரு விளம்பரச் செலவின்றி கண்டுபிடிப்புகள் மற்றும் புது கண்டிபிடிப்புக்களினை பற்றி பொது மக்களுக்குத் தெரியப்படுத்த ஊடகத் திட்டங்களைச் செயல்படுத்த ஆணைக்குழு எப்போதும் முயற்சிக்கிறது, மேலும் பின்வரும் திட்டம் இதற்கு ஒரு எடுத்துக்காட்டு ஆகும்.

- **தெரன "STARTUP 2021"**

பொது-தனியார் கூட்டாண்மையின் அடிப்படையில் கண்டுபிடிப்பாளர்களை உருவாக்கும் முயற்சிக்காக தெரன தொலைக்காட்சி அலைவரிசையினால் தொடங்கப்பட்ட தெரனவின் "STARTUP 2021" நிகழ்ச்சியின் மூலோபாய பங்காளியாக ஆணைக்குழு செயல்படுகிறது. 2020 ஆம் ஆண்டில், ஒரு மதிப்பீட்டு நடைமுறை தொடங்கப்பட்டது.

.







"STARTUP 2021" என்பது இளம் கண்டுபிடிப்பாளர்களை உருவாக்குவதற்கான ஆலோசனையை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு உண்மைத் திட்டமாகும். இந்தத் திட்டம் வணிக ஆலோசகரின் உதவியைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்குவதுடன் வணிக அறிவு, அனுபவம் மற்றும் திறன்களைச் சேகரிக்கும் போது வணிகமயமாக்கல் மட்டத்தில் கண்டுபிடிப்பை நவீனமயமாக்குவதன் நன்மையையும் கொண்டுள்ளது. திட்டத்தில் வெற்றி பெற்றவர்கள் தங்கள் சொந்த தொழிலினை தொடங்க மானியம் பெறுகின்றனர். இத்தகைய ஒத்துழைப்புகளினை வழங்கி புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு ஊக்கம் அளிப்பதன் மூலம் புதிய தொழில்முனைவோரை ஆணைக்குழு உருவாக்கி வருகிறது.

## 2.18 மனித வள அபிவிருத்தி

உள்ளூர் கண்டுபிடிப்பாளர்களுக்கு அதிகபட்ச ஆதரவை வழங்கும் பெரும் பொறுப்பு இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது, எனவே, கண்டுபிடிப்பாளர்களுக்கு தரமான மற்றும் திறமையான சேவையை வழங்குவதற்காக அதன் ஊழியர்களின் திறன்களை மேம்படுத்த, விடயத் துறையில் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்த ஆணைக்குழு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

2021 ஆம் ஆண்டில் திறன் மேம்பாட்டிற்காக பணியாளர்கள் பங்கேற்ற பயிற்சி திட்டங்கள் பின்வருமாறு:

- ஆணைக்குழுவின் ஊழியர்கள் மற்றும் பிற கணினிப் பயிலுனர்களுக்காக, ஆணைக்குழுவின் பல அதிகாரிகளின் வள பங்களிப்புடன் Microsoft Illustrator/ Photoshop மென்பொருள் குறித்த ஒரு நாள் கணினிப் பட்டறை நடத்தப்பட்டது.

- "அரசாங்க மற்றும் மாகாண சபைகளின் நிதி முகாமைத்துவ கட்டமைப்பு மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பாக அரசு அதிகாரிகளின் செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய அடிப்படை அறிவு" என்ற தலைப்பில் ஒரு அதிகாரி இரண்டு நாள் செயலமர்வில் பங்கேற்றார்.

- திறன் மேம்பாட்டு நிதியத்தால் நடத்தப்பட்ட "தரவு பகுப்பாய்விற்கான உயர் Microsoft Excel பயிற்சி" குறித்த மூன்று நாள் பட்டறையில் ஒரு அதிகாரி பங்கேற்றார்.

- நிகழ்நிலை தளத்தைப் பயன்படுத்தி Metropolitan கெம்பசினால் நடத்தப்பட்ட "பொது அலுவலக நிர்வாகம் மற்றும் மின்-குறியீடு" குறித்த மூன்று நாள் பயிலரங்கில் நான்கு அதிகாரிகள் பங்கேற்றனர்.

- நிகழ்நிலை தளத்தைப் பயன்படுத்தி Metropolitan கெம்பசினால் நடத்தப்பட்ட "கருத்திட்ட நிர்வாகத்தின் அத்தியாவசியங்கள்" என்ற தலைப்பிலான மூன்று நாள் பயிலரங்கில் இரண்டு அதிகாரிகள் பங்கேற்றனர்.

- நிகழ்நிலை தளத்தைப் பயன்படுத்தி Metropolitan கெம்பசினால் நடத்தப்பட்ட "மின் கொள்முதல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி" என்ற தலைப்பிலான மூன்று நாள் கருத்தரங்கில் ஒரு அதிகாரி பங்கேற்றார்.

- ஆணைக்குழுவின் நான்கு அதிகாரிகள், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொதுக் கொள்வனவு மற்றும் ஒப்பந்த நிர்வாகத்திற்கான உயர் தேசிய டிப்ளோமா - 2021/2022 பாடநெறிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

## இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

**டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**நிதியியல் நிலைமை பற்றிய கூற்று**

| | குறிப்பு | 2021<br>LKR | 2020<br>LKR |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடப்புச் சொத்துக்கள்** | | | |
| காசும் வங்கி மீதியும் | 1 | **62,331,856** | 66,587,892 |
| பண்டிகை முற்பணம் | | **1,250** | - |
| கடன்பட்டோர் | 2 | **11,396,880** | 10,491,776 |
| ஏனைய பெறுகைகள் | | **-** | 10,000 |
| மீளளிக்கத்தக்க வைப்புகள் | 3 | **2,407,000** | 2,407,000 |
| அனர்த்த கடன் | | **917,399** | 756,212 |
| கொவிட் 19 நிகழ்ச்சித்திட்டம் பற்றிய கடன்கள் | | **722,718** | 994,714 |
| தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையிடமிருந்து பெறப்பட வேண்டியவை | | **7,560** | 7,560 |
| ஏனைய படிகள் | | **136,633** | 136,633 |
| முற்கொடுப்பனவு | 4 | **1,468,653** | 592,860 |
| இலங்கை புத்தாக்குனர் நிதியத்திடமிருந்து கடன்கள் | | **707,548** | 1,050,885 |
| *(கழிக்க) ஐயக்கடன் ஒதுக்கீடு (100%)* | 5 | **(9,602,964)** | (9,802,964) |
| IAFM-SL கடன் | | **4,500,000** | - |
| எரிபொருள் வைப்பு | | **100,000** | 100,000 |
| டி - சேர்ட் இருப்பு | 6 | **414,480** | 414,480 |
| காகிதாயிகள் இருப்பு | 6 | **386,860** | 445,954 |
| | | **75,895,873** | **74,193,002** |
| **நடப்பல்லாத சொத்துக்கள்** | | | |
| இலங்கை புத்தாக்குனர் நிதியத்திடமிருந்து கடன்கள் | | **1,737,658** | 2,198,830 |
| கொவிட் 19 நிகழ்ச்சித்திட்டம் பற்றிய கடன்கள் | | **237,729** | 994,376 |
| IAFM-SL கடன் | | **1,500,000** | - |
| அனர்த்த கடன் | | **2,953,058** | 2,672,247 |
| சொத்து மற்றும் கருவிகள் | 7 | **47,349,863** | 35,478,691 |
| | | **53,778,308** | **41,344,145** |
| **மொத்த சொத்துக்கள்** | | **129,674,181** | **115,537,147** |
| **நிதியம் மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **நடப்பு பொறுப்புக்கள்** | | | |
| கடன் கொடுத்தோர் | 8 | **1,316,664** | 167,330 |
| நிலுவை செலவினங்கள் | 9 | **2,201,973** | 2,365,509 |
| | | **3,518,637** | 2,532,839 |
| **நடப்பல்லாத பொறுப்புக்கள்** | | | |
| மகாவலி கருத்திட்ட ஒதுக்கீட்டு | 10 | **6,534,026** | - |
| பணிக்கொடை ஒதுக்கீடு | 11 | **4,268,344** | 3,682,614 |
| IAFM-SL | 12 | **36,472,155** | 36,472,155 |
| தேசிய அடைகாப்பக நிலைய நிதியம் | 13 | **37,921,883** | 45,417,472 |
| Government Capital Grant | 14 | **9,905,989** | 14,334,314 |
| இலங்கை புத்தாகுனர் நிதியம் | 15 | **12,837,184** | 13,240,886 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **111,458,217** | **115,680,281** |
| **தேறிய சொத்துக்கள்** | | **18,215,964** | **(143,134)** |
| **தேறிய சொத்துக்கள்/உரிமையாண்மை** | | | |
| திரட்டப்பட்ட நிதியம் | | **(3,284,036)** | (143,134) |
| மீள்மதிப்பீட்டு மிகை | | **21,500,000** | - |
| **மொத்த தேறிய சொத்துக்கள்/உரிமையாண்மை** | | **18,215,964** | **(143,134)** |

முக்கிய கணக்கியல் கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பன இந்த நிதிக்கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. பக்கங்கள்30-38

டி.எ. சரத்சந்திர
உதவிப் பணிப்பாளர் (நிதியியல்)

என்.என்.டபிள்யு. தொலவத்தை
பணிப்பாளர்/சிரேட்ட நிறைவேற்று அலுவலர்

இந்த நிதிக்கூற்றுக்கள் தயாரித்து முன்னளிப்பு செய்தல் பணிப்பாளர் பொறுப்பாகும்.
இந்த நிதிக்கூற்றுக்களாவன, பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதுடன் அவர்கள் சார்பில் கையொப்பமிடப்பட்டுள்ளது.

பேரா. என்.எம்.எஸ் . சிரிமுது
உதவி ஆணையாளர்

பேரா. ஜி என் . மலவிகே
உதவி ஆணையாளர்

கலாநிதி . R. M. H.M. A. I. ஹேரத்
உதவி ஆணையாளர்

பெப்ரவரி 18/2022
கொழும்பு

## இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

## நிதியியல் செயலாற்றுகை பற்றிய கூற்று

| டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்குரியது | Note | 2021 | 2020 |
|---|---|---|---|
| | | LKR | LKR |
| **வருமானம்** | | | |
| அரச பங்களிப்பு | | | |
| - நடப்பு | 16 | 40,370,000 | 40,600,000 |
| - கருத்திட்டம்/நிகழ்ச்சித் திட்டம் | 20 | 10,107,926 | 4,355,907 |
| - செயற்றிறன் நிர்மாணம் | | 533,750 | 270,000 |
| மூலதன மானியம் கடன் தீர்வு - நிலையான சொத்துக்கள் | 7 | 1,686,650 | 1,735,688 |
| அடைகாப்பக நிதிய கடன் தீர்வு - இயந்திரம், கருவிகள் | | 7,495,590 | 5,784,976 |
| ஏனைய வருமானம் | 17 | 1,243,843 | 1,559,070 |
| **மொத்த வருமானம்** | | **61,437,759** | **54,305,639** |
| **செலவினங்கள்** | | | |
| தனி ஆள் வேதனாதிகள் | 18 | 19,424,172 | 17,430,480 |
| நிர்வாகம் மற்றும் தாபிப்பு செலவினங்கள் | 19 | 25,010,573 | 25,154,266 |
| பெறுமானத் தேய்வு - நிலையான சொத்துக்கள் | 7 | 9,182,240 | 7,520,664 |
| பணிக்கொடை | 11 | 585,730 | 862,357 |
| புத்தாக்குனர் ஊக்குவிப்பு செலவினம் | 20 | 10,107,926 | 4,355,907 |
| ஏனைய செலவினங்கள் | 21 | 560,943 | 7,863 |
| **மொத்த செலவினம்** | | **64,871,583** | **55,331,537** |
| **வருடத்திற்கான மிகை/(நட்டம்)** | | **(3,433,824)** | **(1,025,898)** |

முக்கியமான கணக்கியல் கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பன இந்த நிதிக் கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. பக்கங்கள் 30 - 38

## இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு
## உரிமையாண்மையில் மாற்றம் பற்றிய கூற்று

| | Note | Revaluation Surplus | Accumulatd Fund | Total Equity |
|---|---|---|---|---|
| | | LKR | LKR | LKR |
| 2020 ஜனவரி 01 இல் உள்ளவாறான மிகுதி | | - | (238,936) | (238,936) |
| 2020 ஆம் ஆண்டிற்கான மிகை/(நட்டம்) | | - | (1,025,898) | (1,025,898) |
| 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மானியம் அறுதியிடு செய்தல் - W.M ஜயவர்த்தன | | - | 603,810 | 603,810 |
| கொடுப்பனவுஇரத்து செய்தல் | | - | 6,000 | 6,000 |
| மிகை குழு கட்டணம் | | - | 1,260 | 1,260 |
| முன்னைய வருட செலவினம் திருப்பி கொடுத்தல் - தே.எ.ஆ.அ. நிலையம் | | - | 521,531 | 521,531 |
| அனைர்த்தக்கடன் பேரேட்டு மீதி திருத்தம் | | - | (10,902) | (10,902) |
| **2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | | - | (143,134) | (143,134) |
| *முன்னைய வருட சீராக்கல் - 2020* | | | | |
| முத்திரை கட்டணம் இரத்து செய்தல் | | | 25 | 25 |
| காசோலை இரத்து செய்தல்- கைத்தொழில் தொழில் நுட்ப நிறுவகம் | | | 292,896 | 292,896 |
| **2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி (மீள் குறிப்பீடு)** | | **-** | **149,787** | **149,788** |
| 2021ஜனவரி 01ஆம் திகதியில் உள்ளவாறான மிகுதி | | - | 149,787 | 149,787 |
| 2021 ஆம் வருடத்திற்கான மிகை /நட்டம் | | - | (3,433,824) | (3,433,824) |
| வாகனங்கள் மீள்மதிபீட்டு | | 21,500,000 | - | 21,500,000 |
| **2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | | **21,500,000** | **(3,284,036)** | **18,215,964** |

முக்கியமான கணக்கியல் கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பன இந்த நிதிக் கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. பக்கங்கள் 30-38

**இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு**
**டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான காசோட்டக் கூற்று**

| | குறிப்பு | 2021 LKR | 2020 LKR |
|---|---|---|---|
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல் | | | |
| **மிகை/(நட்டம்)** | | (3,433,824) | (1,025,898) |
| **காசல்லாத பெயர்ச்சிகள்** | | | |
| பெறுமான தேய்வு | 7 | 9,182,240 | 7,520,664 |
| கருத்திட்டங்கள்/நிகழ்ச்சித்திட்டங்கள் மூலதன மானியத்தில் பிற்போடப்பட்ட வருமானம் | 20 | (10,107,926) | (4,355,907) |
| பதவியணி செயற்றிறன் நிர்மாணத்தில் பிற்போடப்பட்ட வருமானம் | | (533,750) | (270,000) |
| மூலதன மானிய கடன் தீர்வு - நிலையான சொத்துக்கள் | | (9,182,240) | (7,520,664) |
| தேசிய அதி புலமை சொத்து அலுவலகத்திடமிருந்து கணணி மானியம் | | - | (70,000) |
| பணிக்கொடை ஒதுக்கீடு | 11 | 585,730 | 862,357 |
| அனர்த்தக்கடன் திருத்தம் | | - | (10,902) |
| விற்பனை நட்டம் | | 560,943 | 2,732 |
| **சீராக்கங்களாவன** | | | |
| கடன்பட்டோரில் மாற்றம்( செலுத்தப்படாத கடன்கள் தவிர ஏனையவற்றில் ) | | (905,105) | 1,010 |
| காகிதாயிகள் இருப்பில் மாற்றம் | | 59,095 | 39,292 |
| T - சேர்ட்டுக்கள் இருப்பில் மாற்றம் | | - | 785 |
| முற்பண கொடுப்பனவில் மாற்றம் | 3 | (875,793) | 1,677,698 |
| பண்டிகை முற்பணத்தில் மாற்றம் | | (1,250) | 3,300 |
| நிலுவை செலவினத்தில் மாற்றம் | | (163,536) | (9,819,960) |
| ஏனைய பெறுகைகளில் மாற்றம் | | 10,000 | 46,401 |
| மீளளிக்கத்தக்க வைப்புக்களில் மாற்றம் | | - | (2,000) |
| கடன் கொடுத்தோரில் மாற்றம் | | 1,149,334 | (3,694,809) |
| முன்னைய வருடத்துடன் தொடர்புற்ற வகையில் கிடைக்கப்பெற்ற பணம் | | - | 1,132,601 |
| | | (13,656,080) | (15,483,301) |
| பணிக்கொடை கொடுப்பனவு | | - | - |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல் | | **(13,656,080)** | (15,483,301) |
| முதலிட்டு செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல் | | | |
| நிலையான சொத்துக்கள் கொள்வனவு | 7 | (114,355) | (32,978,461) |
| மகாவலி கருத்திட்ட செலவினம் | | (14,159,766) | - |
| புத்தாக்குனர் நிதியத்திலிருந்து கடன் மீள் கொடுப்பனவு | | 616,024 | 469,552 |
| புத்தாகுனர் நிதியத்திலிருந்து செலவினம் | | (98,582) | (935,566) |
| அனர்த்தக்கடன் வழங்குகை | | (1,215,300) | (981,649) |
| அனர்த்தக்கடன் மீள் கொடுப்பனவு | | 773,303 | 709,169 |
| கொவிட் 19 நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மானியம் | | (160,120) | (4,808,043) |
| கொவிட் 19 நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் | | - | (2,350,000) |
| கடன் இரத்து | | 805,000 | - |
| நவநிபையும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் | | (1,025,750) | (3,324,250) |
| IAFM-SL கீழ் கடன் | | (6,000,000) | - |
| **பிறப்பிக்கப்பட்ட காசு முதலீட்டு செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்டது** | | **(20,579,548)** | (44,199,248) |
| **நிதி செயற்பாடுகளில் காசோட்டம்** | | | |
| மூலதன மானியம் | | 7,900,000 | 24,538,000 |
| மகாவலி கருத்திட்டம் | | 22,079,592 | - |
| **நிதி செயற்பாடுகளில் மூலம் பிறப்பிக்கப்பட்ட காசு** | | **29,979,592** | 24,538,000 |
| **வருட காலப்பகுதியில் காசும் காசிற்கு சமமானவற்றிலும் அதிகரிப்பு /குறைவு** | | (4,256,036) | (35,144,550) |
| **வருட தொடக்கத்தில் காசும் காசிற்கு சமமானவையும்** | | 66,587,892 | 101,732,442 |
| வருட இறுதியில் காசும் காசிற்கு சமமானவையும் | | **62,331,856** | **66,587,892** |
| **காசும் காசிற்கு சமமானவையும் பகுப்பாய்வு** | | | |
| **கணக்கிலக்கம்** .033-1-001-0-1791066 | | 11,925,890 | 10,965,343 |
| **கணக்கிலக்கம்** .033-1-001-2-1791065 | | 48,954,908 | 54,567,720 |
| **கணக்கிலக்கம்** .204402131791066 | | 1,451,059 | 1,054,829 |
| | | 62,331,856 | 66,587,892 |

30 – 38 பக்கங்கள் வரையிலுமுள்ள முக்கியமான கணக்கியல் கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பன இந்த நிதிக்கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

**இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு**
**வரவு செலவு திட்ட மற்றும் உண்மையான நிதியங்களை ஒப்பிடல்**

LKR

| | அனுமதிக்கப்பட்ட பாதீடு | | திறை சேரியினால் விடுவிக்கப்பட்ட நிதியம் | |
|---|---|---|---|---|
| | 2021 | 2020 | 2021 | 2020 |
| நடப்பு | **46,000,000.00** | 40,600,000.00 | **40,370,000.00** | 40,600,000.00 |
| மூலதனம் | **17,500,000.00** | 43,300,000.00 | **7,900,000.00** | 24,538,000.00 |
| மொத்தம் | **63,500,000.00** | **83,900,000.00** | **48,270,000.00** | **65,138,000.00** |

| வருடம் | அரச பங்களிப்பு மூலதனம் (இலங்கை ரூபாய் ) |
|---|---|
| 1991 | 163,050.00 |
| 1992 | 1,700,000.00 |
| 1993 | - |
| 1994 | 250,000.00 |
| 1995 | 196,000.00 |
| 1996 | 113,500.00 |
| 1997 | 757,000.00 |
| 1998 | 1,700,000.00 |
| 1999 | 290,000.00 |
| 2000 | 4,500,000.00 |
| 2001 | 2,870,000.00 |
| 2002 | 700,000.00 |
| 2003 | 2,500,000.00 |
| 2004 | 621,000.00 |
| 2005 | 5,997,000.00 |
| 2006 | 33,991,000.00 |
| 2007 | 37,100,000.00 |
| 2008 | 24,106,000.00 |
| 2009 | 15,765,000.00 |
| 2010 | 4,500,000.00 |
| 2011 | 6,151,010.00 |
| 2012 | 21,562,000.00 |
| 2013 | 17,061,000.00 |
| 2014 | 40,000,000.00 |
| 2015 | 30,269,992.00 |
| 2016 | 57,248,655.00 |
| 2017 | 73,133,822.00 |
| 2018 | 85,750,000.00 |
| 2019 | 58,000,000.00 |
| 2020 | 24,538,000.00 |
| 2021 | 7,900,000.00 |

# பிரதானமான கணக்கியற் கொள்கைகள் 2020

## 1. ஆணைக்குழு பற்றிய தகவல்கள்

### 1.1. அறிக்கை செய்யும் நிறுவகம்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தினூடாக இலங்கை சார் புத்தாக்குனர்களையும் மற்றும் அதனோடிணைந்த நடவடிக்களையும் மேம்படுத்தி மற்றும் உற்பத்தி செய்யும் பொருட்டு ஒரு நியதிச் சட்ட சபையாக தாபிக்கப்பட்டது. ஆணைக்குழுவானது விஞ்ஞானம், தொழினுட்டபம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் அகப்பாட்டெல்லையின் கீழ் செயற்படுகின்றது.

2021 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவானது இல 46 மற்றும் 48,கொட்டா வீதி,கொழும்பு 08 எனும் விலாசத்தினை தனது அமைவிடமாக கொண்டது.

## 2. தயாரிப்பின் அடிப்படை

பிரதானமாக கணக்கியற் கொள்கைகள் உள்ளடங்கலாக இலங்கை அரச துறை சார் கணக்கியற் கட்டளைச் சட்டங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நியதிச் சட்ட தேவைப்பாடுகள் ஆகியவை உள்ளடங்கலாக நிதியியல் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட அடிப்படையினை இப்பிரிவு எடுத்துக்கூறுகின்றது.

### 2.1 ஒப்புமை கூற்று

ஆணைக்குழுவினது 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவுற்ற வருடத்திற்குரியதும் அத்திகதியில் உள்ளவாறானதுமான நிதியியல் கூற்றுக்களாவன, கணக்காய்வாளர் நாயகம் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு என்பனவற்றின் பங்களிப்புடன் இலங்கை பட்டய கணக்கறிஞர் நிறுவகத்தினை சார்ந்த பொதுத்துறை கணக்கியற் கட்டளைச்சட்ட குழுவினால் முன்வைக்கப்பட்ட இலங்கை பொதுத்துறை கட்டளைச்சட்டங்களிற்கு அமைவுற தயாரிக்கப்பட்டுள்ளன.

- இந்த நிதிக்கூற்றுக்களாவன கீழ் குறிப்பீடுசெய்யப்பட்ட விடயங்களை உள்ளடக்கியுள்ளது.
- நிதிச் செயலாற்றுகை கூற்று
- ஆணைக்கழு பற்றிய விபரங்களைத் தரும் நிதியியல் நிலை பற்றிய கூற்று
- மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் ஆணைக்குழுவின் ஒப்புரவில் ஏற்பட்ட மாற்றங்களை எடுத்துக்கூறும் வகையில் தயாரிக்கப்பட்ட ஒப்புரவின் மாற்றம் பற்றிய கூற்று
- ஆணைக்குழுவின் காசு பிறப்பிக்கக்கூடிய திறமை மற்றும் ஆணைக்குழுவின் தேவைப்பாடுகளுக்கு அமைவுற அவை பயன்படுத்தப்பட்டமை போன்ற விபரங்களினை தருகின்ற காசோட்டக் கூற்று
- கணக்கியற் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்க விபரங்களை உள்ளடக்கிய வகையில் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களிக்கான குறிப்புக்கள்

### 2.2 நிதியியல் கூற்றுக்களுக்கான பொறுப்பு

இலங்கை பொதுத்துறை கணக்கியற் கட்டளைச் சட்டங்களிலுள்ள ஏற்பாடுகளிற்கு அமைவுற, ஆணைக்குழுவின் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்னளிப்பு என்பனவற்றுக்கு பணிப்பாளர் சபையே பொறுப்பாகும்.

### 2.3 அளவீட்டின் அடிப்படை

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நிதியியல் கூற்றுக்களான அட்டுறு அடிப்படையில் வரலாற்று கிரய முறையில் மாற்றங்கள் எதுவும் செய்யப்படாது நிலையான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதோடு பணவீக்கத்துடன் தொடர்புடைய காரணிகள் தொடர்பில் எதுவித சீராக்கங்களும் செய்யப்படவில்லை.

### 2.4 நாணய செயற்பாடும் அதனது முன்னளிப்பும்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நிதியியல் கூற்றுக்களாவன இலங்கை ரூபாவினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன என்பதுடன் இதுவே நிறுவகத்தின் செயற்பாடுகள் நிமித்தம் பயன்படுத்தப்படும் நாணயமாகும். நிதியியல் ரீதியிலான தகவல்களாவன இலங்கை ரூபாயின் முன்னளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 2.5 திரவியத் தன்மையின் பாவனை, ஈடு செய்தல் மற்றும் முழு நாணயமாக்குதல்

### திரவியங்களும் மற்றும் கூட்டுத் தொகையும்

இலங்கை பொதுத்துறை கணக்கியற் கட்டளைச்சட்டங்கள் (SLPSAS) 1 இல் நிதியியல் கூற்றுக்களினை அனுமதித்தல் என்பதில் அனுமதிக்கப்பட்டதற்கு அமைவுற, ஒரே தன்மையிலான உருப்படிகளைக் கொண்ட ஒவ்வொரு திரவிய வகுதியும் நிதிக் கூற்றுக்களில் தனியாக முன்னளிப்பு செய்யப்பட்டுள்ளது. ஒரே தன்மையினது அல்லாத உறுப்படிகள் மற்றும் செயற்பாடுகள் என்பன அவை திரவிய வகுதிகளாக இல்லாத போதிலும் அவை தனித்தனியாக முன்னளிப்பு செய்யப்படுகின்றது.

### ஈடு செய்தல்

இலங்கை பொதுத்துறை கணக்கியற் கட்டளைச்சட்டங்களில் அனுமதிக்கப்பட்டாலேயன்றி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அத்துடன் வருமானம் மற்றும் செலவினம் என்பன நிதியியல் கூற்றுக்களில் ஈடு செய்யப்படவில்லை.

### முழு நாணயமாக்குதல்

“நிதியியல் கூற்றுக்களில் தரப்பட்டுள்ள தொகைகளாவன அண்மித்த ரூபாயிற்கு முழு நாணயமாக்குதல் செய்யப்பட்டுள்ளது”.

## 2.6 தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு

ஆணைக்குழுவின் நிதியியல் கூற்றுக்களாவன தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

## 2.7 அறிக்கை செய்யும் காலப்பகுதிக்குப்பின் நிகழ்ந்த நிகழ்வுகள்

இலங்கை பொதுத்துறை கணக்கியற் கட்டளை சட்டங்கள் (SLPSAS) 6 இற்கு அமைவுற அறிக்கை செய்யப்பட்ட திகதிக்கும் மற்றும் நிதியியல் கூற்றுக்கள் வெளியீடு செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட திகதிக்கும் இடையில் இடம் பெற்ற அனுகூல மற்றும் பிரதிகூல நிகழ்வுகள், அறிக்கைசெய்யப்பட்ட பின் நிகழ்ந்த நிகழ்வுகளாகக் கருதப்படும். இதனடிப்படையில் அறிக்கை செய்யப்பட்ட திகதிக்குப்பின் எதுவித நிகழ்வுகளும் இடம் பெறவில்லை.

## 3. வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கியற் கட்ளை சட்டம் (SLPSAS) 5 இற்கு அமைவுறகொடுக்கல் வாங்கல் இடம் பெற்ற போது நிலவிய நாணய பரிமாற்ற வீதத்தின் அடிப்படையில் வெளிநாட்டு பரிமாற்று வீதத்திற்குட்பட்ட சகல கொடுக்கல் வாங்கல்களும் இலங்கை ரூபாயிற்கு அதாவது இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் செயற்படும் நாணயத்திற்கு மாற்றப்பட்டது.

## 4. சொத்து மற்றும் கருவிகள்

### 4.1 இனம் கண்டறியப்படும் அடிப்படை

திருத்தி பாவிக்கக்கூடியதும் தொட்டுணரக் கூடியதுமான உறுப்படிகளாக இருக்கின்ற சொத்து மற்றும் கருவிகளாவன. ஒரு வருடத்திற்கும் அதிகமாக பாவிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 4.2 அளவீட்டின் அடிப்டை

ஒரு சொத்தாக இனம் காணப்படும் சொத்து ஆதனம் மற்றும் கருவிகள் என்பன ஆரம்பத்தில் அதன் கொள்விலையில் மதிப்பீடு செய்யப்படும் கொள்விலை என்னும் போது அதற்குள் அச் சொத்தை கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்டசெலவினம் மற்றும் அதைத் தொடர்ந்து அச் சொத்திற்கு புதிதாக ஒரு பாகத்தை சேர்க்கவோ அல்லது ஒரு பாகத்தை பிரதியீடு செய்யவோ ஏற்பட்ட செலவினம் என்பன அதற்குள் உள்ளடங்கும்

கணணி கருவிகளினை பொறுத்தவரையில் அக் கணணியின் செயற்பாட்டுடன் தொடர்புற்ற வகையில் கொள்வனவு செய்யப்படும் மென்பொருள் தொடர்பில் செலவிடப்படும் செலவினமும் அக் கணணியின் கொள்விலையுடன் சேர்க்கப்படும்

சொத்து மற்றும் கருவிகளின் பாகங்களாவன வேறுபட்ட பாவணை காலத்தை கொண்டிருப்பின் அவை குறிப்பிட்ட அந்த சொத்து மற்றும் கருவிகளினது தனிப்பட்ட உறுப்படிகளாக (பிரதான ஆக்கக்கூறுகள்) கருதப்டும்.

இந்த சொத்து மற்றும் கருவிகள் தொடர்பில் இடம் பெற்ற திருத்தற் மற்றும் பேணல் செலவினங்கள் அந்தந்த காலப்பகுதிக்கான இலாப மற்றும் நட்ட கணக்கில் பதியப்படும். பிரதான திருத்தற் செலவினங்களாவன, அந்த

சொத்தின் நடப்புபெறுமதியினை அதிகரிக்கும் பொருட்டு அல்லது எதிர்கால பொருளில் அனுகூலங்களினை கருத்திற் கொண்டு அக் குறிப்பிட்ட சொத்தின் கொள்விலைப் பெறுமானத்தின் ஒரு பகுதியாக கருதப்படும் . பிரதான திருத்தற் செலவினங்கள் அச்சொத்தின் எஞ்சியுள்ள பாவணை காலத்தை கருத்திற் கொண்டு பெறுமானத் தேய்விற்கு உட்படுத்தப்படும்.

## 4.3 மீள் மதிப்பீடு

2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், 31 ஆம் திகதியில் இருந்து வாகன வகையினை சார்ந்த சொத்துக்கள் தொடர்பில் மீள் மதிப்பீட்டு முறையானது பயன்படுத்தப்பட்டது. வாகன வகையினை சார்ந்த சொத்துக்களாவன நியாயமானதொரு விலையில் பதிவு செய்யப்படிருந்தன.மீள் மதிப்பீட்டு மிகையானது உரிமையாண்மையில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

சொத்து மற்றும் உபகரணங்களை அகற்றும்போது அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதுவும் எதிர்பார்க்கப்படாதபோது அவற்றுக்கான அங்கீகாரம் நீக்கப்படுவதனால் ஏற்படும் எந்த இலாபம் அல்லது நஷ்டமானது (சொத்தின் விற்பனை விலைக்கும் மற்றும் பின் கொண்டு செல்லும் தொகைக்கும் இடையே உள்ள வித்தியாசம்) சொத்தின் அங்கீகாரம் நீக்கப்பட்ட ஆண்டின் 'பிற வருமானம் அல்லது பிற செலவுகளில்' அங்கீகரிக்கப்படுகிறது.

## 4.4 பெறுமானத் தேய்வு

சொத்து மற்றும் கருவிகளின் ஒவ்வொரு பகுதியினதும் மதிப்பீட்டு பாவனைக் காலத்தை கருத்திற் கொண்டு நேர்கோட்டு முறையில் கணிப்பீடு செய்து இலாப நட்ட கணக்கில் பதியப்படும்.

நடப்பு மற்றும் ஒப்புமை வருடங்களிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட பாவணை காலம் வருமாறு

| **சொத்தின் வகை** | **வருட வீதம்** | **காலப்பகுதி (வருடங்கள்)** |
|---|---|---|
| அலுவலக தளபாடம் | 15% | 06 2/3 |
| அலுவலக கருவிகள் | 20% | 05 |
| பெயர் பலகைகள் | 10% | 10 |
| வாகனங்கள் | 20% | 05 |
| ஊடக கருவிகள் | 20% | 05 |
| தொலைக்காட்சி மற்றும் கட்புல நாடா | 20% | 05 |
| அலுவலக பொருத்துக்கள் | 15% | 06 2/3 |
| அடைகாக்கும் இயந்திரங்கள் | 20% | 05 |

2014 ஜனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து வருடாந்த நிதியியல் கூற்றுக்கள் தயாரிக்கப்படுமிடத்து இலங்கைபொதுத்துறை கணக்கியற் கட்ளைச் சட்டம் (SLPSAS) 7 பயன்படுத்தப்படுகின்றது.

## 4.5 முற்றுமுழுதாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் கருவிகள்

முற்றுமுழுதாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டதும் நிதியியல் நிலமைக் கூற்றில் உள்ளவாறான திகதியில் இன்னமும் பாவணையில் உள்ளதுமான ஆணைக்குழுவினது சொத்துக்கள் கருவிகள் பற்றிய விபரங்கள் வருமாறு

| **டிசம்பர் 31 இல் உள்ளவாறாக** | **2021 இலங்கை ரூபாய்** | **2020 இலங்கை ரூபாய்** |
|---|---|---|
| அலுவலக தளபாடம் | 861,200 | 708,582 |
| அலுவலக கருவிகள் | 5,490,577 | 5,487,982 |
| வாகனங்கள் | | 16,470,191 |
| ஊடக கருவிகள் | 1,380,935 | 1,354,940 |
| தொலைக்காட்சி மற்றும் கட்புல நாடா | 941,600 | 111,750 |
| **மொத்தம்** | **8,674,312** | **24,133,445** |

#### 4.6 பாவனையிலிருந்து ஓய்வுபெற்றசொத்து மற்றும் கருவிகள்

ஆணைக்குழுவின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் கருவிகளாவன அறிக்கை செய்யும் திகதியில் பாவணையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளது.

| டிசம்பர் 31 இல் உள்ளவாறாக | 2020 இலங்கை ரூபாய் | 2019 இலங்கை ரூபாய் |
|---|---:|---:|
| அலுவலக கருவிகள் | 19,990 | 98,887 |
| பெயர் பலகைகள் | 110,805 | 110,805 |
| கண்காட்சி சாவடிகள் | 37,690 | 37,690 |
| அலுவலக பொருத்துக்கள் | 38,000 | 1,085,682 |
| **மொத்தம்** | **1,313,064** | **1,333,064** |

## 5. வரையறை செய்யப்பட்ட பங்களிப்பு திட்டம் – ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்

சம்மந்தப்பட்ட நியதிச்சட்ட மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவுற, ஊழியர்கள் ஊழிய சேமலாப நிதிச்சட்டம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு சட்டத்திற்கு உரித்துடையவர்கள் ஆவார்கள். ஊழியர் சேமலாபத்தை பொருத்தவரையில், ஆணைக்குழுவும் மற்றும் ஊழியர்களும் முறையே ஊழியர் சம்பளத்தில் 15% மற்றும் 10% இனை ஊழியர்களின் சேமலாபநிதியத்திற்கு பங்களிப்பு செய்யும் அதே வேளையில் ஊழியர் நம்பிக்கை பொறுப்புநிதியத்திற்கு ஊழியர்களின் மொத்த சம்பளத்தில் 3% இனை ஆணைக்குழு பங்களிப்பு செய்யும்.

## 6. நிதியம்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு அரசின் பங்களிப்பானது அரசின் வருடாந்த மதிப்பிட்டில் இரு வகுதிகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது. அவையாவன

1. நடப்பு செலவினத்திற்கான நிதியம்
2. மூலதன செலவினத்திற்கான நிதியம்

நடப்பு மானியமானது வருமான மற்றும் செலவின கணக்கில் கணக்கீடு செய்யப்படுவதுடன் மூலதன மானியமானது, இலங்கை பொதுத்துறை கணக்கியற் சட்டம் 20 இற்கு அமைவுற கணக்கீடுசெய்யப்படும்.

ஆணைக்குழுவின் நடப்பு செலவினமானது வருமான மற்றும் செலவின கணக்கில்

1. நிர்வாக மற்றும் தாபிப்பு செலவினம்
2. தனியாள் வேதனாதிகள்

ஆகியவற்றின் காட்டப்படும்.

1979 ஆம் அண்டின் 53 ஆம் இலக்க ஊக்குவிப்பு சட்டத்திற்கு அமைவுற ஆணைக்குழுவின் நோக்குகளினை பூரணப்படுத்துவம் செய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆணைக்குழுவினால் செலவிடப்பட்ட செலவினங்கள் மூலதனசெலவினங்களாக பிரதிநிதித்துவம் செய்யப்படும்.

## 7. காசோட்டக் கூற்று

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் காசோட்டக் கூற்று அரச பொதுத்துறை கணக்கியற் சட்டம் 2 இற்கு அமைவுற நேரடியற்ற முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

## 8. நிதிசேகரிப்பு / அனுசரனையாளர்கள் மற்றும் மூன்றாம் தரப்பினரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நன்கொடைகள்

ஆணைக்குழுவானது ஒதுக்கீட்டு கணக்குகளின் ஊடாக அனுசரணையாளர்கள் மற்றும் தரப்பினரிடமிருந்து நிதியத்தினை ஆணைக்குழு சேகரிக்கின்றது.

## நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

| | | 2021<br>LKR | 2020<br>LKR |
|---|---|---|---|
| 1 | **காசும் வங்கி மீதியும்** | | |
| | காசுப்புத்தகம் - 033100101791066 | 11,925,890 | 10,965,343 |
| | காசுப்புத்தகம் - 033100121791065 | - | - |
| | அடை காப்பகம் | 13,762,138 | 13,762,138 |
| | IFMSL | 30,495,958 | 36,472,155 |
| | புத்தாக்குனர் நிதியம் | 4,696,812 | 4,333,427 |
| | காசுப்புத்தகம்- 204402131791066 (வெளிநாட்டு நிதியம்) | 1,451,059 | 1,054,829 |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **62,331,856** | 66,587,892 |
| 2 | **கடன் பட்டோர்** | | |
| | ரிஷான் டுலாஞ்சனா | 174,223 | 98,336 |
| | S.J.S. அமரசேகர | - | 111,115 |
| | C. தசநாயக | 668,100 | 502,700 |
| | T. சக்தி குமார் | 274,000 | 328,000 |
| | S. ரணசிங்க | 298,895 | 43,262 |
| | சாகரிகா உபமாலி | 73,012 | 2,668 |
| | H.W.T. சந்திரநாத் | - | 21,344 |
| | உதயசிறி | 366,666 | 66,668 |
| | டிஷந்த பிரேமநாத் | 97,230 | - |
| | நிலந்த குன்சிங்க | 123,060 | - |
| | சமன் ஹெட்டி ஆராய்ச்சி | 204,012 | - |
| | ஏனையவை -- செயற்பாட்டில் அற்றவை | 9,117,683 | 9,317,683 |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **11,396,880** | 10,491,776 |
| 3 | **மீளளிக்கத்தக்க வைப்புக்கள்** | | |
| | கவின்ரோ புரபட்டி டெவலப்பர்ஸ் | 2,400,000 | 2,400,000 |
| | வரை.மொபிடல் (தனியார்) நிறுவகம் | 2,000 | 2,000 |
| | வரை. எக்ஸ்பிரஸ் வாட்டர் (தனியார்) நிறுவகம் | 5,000 | 5,000 |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **2,407,000** | 2,407,000 |
| 4 | **முற் கொடுப்பனவுகள்** | | |
| | ஒப்பந்த சேவைகள் முற் கொடுப்பனவுகள் | 525,453 | 516,860 |
| | மடி மேல் கணணி முற் கொடுப்பனவுகள் | 943,200 | - |
| | சஹாசக் நிமாவும் முற் கொடுப்பனவுகள் | - | 76,000 |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **1,468,653** | 592,860 |
| 5 | **ஐயக்கடன் ஒதுக்கீடு 100%** | | |
| | ஜனவரி 31 இல் உள்ளவாறான மிகுதி | 9,802,964 | 9,802,964 |
| | வருடத்திற்கான ஒதுக்கீடு | - | - |
| | அறவிட முடியா கடன் பட்டோர் | (200,000) | - |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **9,602,964** | **9,802,964** |

6 **இருப்பு மதிப்பீடு (இலங்கை அரச பொதுத்துறை கணக்கியற் கட்டளை சட்டம் 9 - SLPSAS)**

காகிதாயிகள் இறுதி இருப்பானது SLPSAS 9 இற்கு அமைவுற முதல் வந்தது முதல் போதல் அடிப்படையில் மதிப்பிடப்பட்டது

| | 2021 | 2020 |
|---|---|---|
| **காகிதாயிகள்** | | |
| ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி | 445,954 | 431,446 |
| வருடகாலத்தில் கொள்வனவு | 397,200 | 961,655 |
| வருடகாலத்தில் செலவினம் | (456,295) | (907,855) |
| **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | 387 | 445,954 |
| **T - சேர்ட்டுகள்** | | |
| ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி | 414,480 | 415,265 |
| வருடகாலத்தில் கொள்வனவு | - | - |
| வருடகாலத்தில்செலவினம் | - | 785 |
| **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **414,480** | 414,480 |

5. பெறுமானத்தேய்வு (நிலையான சொத்துக்கள்)

| | | | | | | | | | இயந்திரமும் கருவிகளும் (அடைகாப்பக | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இலங்கை ரூபாய் | இலங்கை ரூபாய் | இலங்கை ரூபாய் | இலங்கை ரூபாய் | இலங்கை ரூபாய் | இலங்கை ரூபாய் | இலங்கை ரூபாய் | இலங்கை ரூபாய் | இலங்கை ரூபாய் | இலங்கை ரூபாய் |
| **கொள்விலை** | | | | | | | | | | - |
| 2020 ஜனவரி 1 இல் | 11,742,457 | 2,412,224 | 211,305 | 16,470,191 | 37,690 | 2,264,999 | 950,300 | 1,139,502 | 4,517,802 | **39,746,471** |
| வருடத்தில் சேர்க்கப்பட்டவை | 88,315 | - | - | - | - | - | - | - | 32,960,146 | **33,048,461** |
| வருடத்தில் விற்பனை செய்யப்பட்டவை | (773,390) | - | - | - | - | - | - | - | - | **(773,390)** |
| **2020 டிசம்பர் 31 இல்** | **11,057,382** | **2,412,224** | **211,305** | **16,470,191** | **37,690** | **2,264,999** | **950,300** | **1,139,502** | **37,477,948** | **72,021,543** |
| வருடத்தில் சேர்க்கப்பட்டவை | 757,400 | - | - | - | - | - | - | 114,355 | - | **871,755** |
| வருடத்தில் விற்பனை செய்யப்பட்டவை | (33,272) | (4,631) | - | - | - | - | - | - | - | **(37,902)** |
| மாற்றீடுகள் | (187,992) | 161,997 | - | - | - | 25,995 | - | - | - | **-** |
| அங் கீகரிக்கப்படாதவை | (800,261) | - | - | - | (37,690) | - | (3,900) | (1,027,682) | - | **(1,869,533)** |
| மீள் மதிப்பீடு | - | - | - | 5,029,809 | - | - | - | - | - | **5,029,809** |
| **2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **10,793,257** | **2,569,590** | **211,305** | **21,500,000** | **-** | **2,290,994** | **946,400** | **226,175** | **37,477,948** | **76,015,672** |
| | | | | | | - | | | - | |
| **திரட்டப்பட்ட பெறுமானத்தேய்வு** | | | | | | | | | - | |
| 2020 ஜனவரி 1 இல் | 9,043,688 | 1,474,321 | 161,163 | 16,470,191 | 37,690 | 1,383,975 | 638,220 | 545,961 | 37,639 | **29,792,845** |
| வருடத்திற்கான விதிப்பனவுகள் | 1,097,319 | 255,547 | 10,050 | - | - | 193,990 | 167,710 | 11,073 | 5,784,976 | **7,520,664** |
| விற்பனைகள் | (770,658) | - | - | - | - | - | - | - | - | **(770,658)** |
| **2020 டிசம்பர் 31 இல்** | **9,370,349** | **1,729,868** | **171,213** | **16,470,191** | **37,690** | **1,577,965** | **805,930** | **557,034** | **5,822,614** | **36,542,851** |
| வருடத்திற்கான விதிப்பனவுகள் | 1,836,823 | 256,259 | 10,050 | - | - | 182,012 | 143,497 | 15,410 | 7,495,590 | 9,939,639 |
| விற்பனைகள் | (32,142) | (4,631) | - | (16,470,191) | - | - | - | - | - | (16,506,963) |
| மாற்றீடுகள் | (186,145) | 160,150 | - | - | - | 25,995 | - | - | - | 0 |
| அங் கீகரிக்கப்படாதவை | (794,692) | - | - | - | (37,690) | - | (3,900) | (473,438) | - | (1,309,719) |
| **'2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **10,194,193** | **2,141,646** | **181,263** | **0** | **-** | **1,785,972** | **945,527** | **99,006** | **13,318,204** | **28,665,808** |
| **தேறிய புத்தக பெறுமதி** | | | | | | | | | - | |
| '202o டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி | 1,687,033 | 682,356 | 40,093 | 0 | - | 687,034 | 144,370 | 582,467 | 31,655,334 | **35,478,692** |
| **'2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **599,064** | **427,944** | **30,042** | **21,500,000** | **-** | **505,022** | **873** | **127,169** | **24,159,744** | **47,349,863** |

| | | | |
|---|---|---|---|
| 8 | **கொடுக்கப்படவேண்டிய ஏனையவைகள்** | | |
| | கடன் கொடுத்தோர் | 1,316,664 | 167,330 |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **1,316,664** | 167,330 |
| 9 | **நிலுவைச் செலவினங்கள்** | | |
| | செலுத்தப்படவேண்டிய துப்புரவாக்கற் செலவினம் | 46,765 | 56,235 |
| | செலுத்தப்படவேண்டிய நீர்க்கட்டணம் | 10,361 | 13,080 |
| | செலுத்தப்படவேண்டிய மின்சாரக் கட்டணம் | 129,193 | 105,863 |
| | செலுத்தப்படவேண்டிய தொடர்பாடல் செலவினம் | 50,566 | 58,277 |
| | செலுத்தப்படவேண்டிய எரிபொருள், மசகு எண்ணெய் செலவினம் | 200,261 | 59,165 |
| | செலுத்தப்படவேண்டிய கணக்காய்வு கட்டணம் | 770,500 | 874,700 |
| | செலுத்தப்படவேண்டிய மேலதிக நேர வேலை கட்டணம் | 68,816 | 189,858 |
| | செலுத்தப்படவேண்டிய ஏனைய ஒப்பந்த சேவைகள் கட்டணம் | - | 89,050 |
| | செலுத்தப்படவேண்டிய சஹசக் நிமவும் | 4,284 | 826,784 |
| | செலுத்தப்படவேண்டிய ஏனைய படிகள் | 51,500 | 2,000 |
| | செலுத்தப்படவேண்டிய பிரயாண செலவினம் | 2,400 | 25,987 |
| | புத்தாக்கம் - புத்தாக்குனர் மேம்படுத்துகை | - | 46,500 |
| | காகிதாயிகள் கொடுப்பனவு | 206,391 | - |
| | கொடுக்க வேண்டிய முத்திரை கட்டணம் | 1,950 | 3,750 |
| | கொடுக்க வேண்டிய ஏனைய நிர்வாக செலவினம் | 658,986 | 14,260 |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **2,201,973** | **2,365,509** |
| 10 | **மகாவலி கருத்திட்ட ஒதுக்கீடு** | | |
| | **ஜனவரி 31 இல் உள்ளவாறான மிகுதி** | | |
| | மகாவலி அதிகாரசபையிடமிருந்து கிடைக்கப்பட்ட நிதியம் | 22,079,592 | - |
| | **கருத்திட்ட செயற்பாடுகளுக்கான செலவினம்** | | |
| | நேனோ நோக்கு அனுராதபுர செலவினம் | (14,159,766) | - |
| | உரிமை ஊதிய வருவாய் | (185,625) | - |
| | யானை வேலி கருத்திட்டத்தில் இருந்து நிர்வாக செலவினம் | (366,250) | - |
| | கடன் கொடுத்தோர் மகாவலி அதிகாரசபைக்கு கொடுக்க வேண்டியது | (761,525) | - |
| | நேனோ நோக்கு அனுராதபுர கொடுக்க வேண்டியது | (72,400) | - |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **6,534,026** | - |
| 11 | **பணிக்கொடை** | | |
| | 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டம்-பணிக்கொடை கொடுப்பனவு | | |
| | ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி | 3,682,614 | 2,820,257 |
| | வருடத்திற்கான ஒதுக்கீடு | 585,730 | 862,357 |
| | வருடத்திற்கான பணிக்கொடை கொடுப்பனவு | - | - |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **4,268,344** | **3,682,614** |
| 12 | **புத்தாக்குனர் விரைவுபடுத்துகை நிதிய பொறிமுறை - இலங்கை (IAFM-SL)** | | |
| | ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி | 36,472,155 | 46,472,155 |
| | கிடைக்கப்பெற்ற நிதியம் | - | - |
| | புத்தாகுனர் நிதியத்திற்கு மாற்றப்பட்டது | - | (10,000,000) |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **36,472,155** | 36,472,155 |

**13 தேசிய அடைக்காப்பக நிதியத்திற்கான செலவினம்**

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி | | 45,417,472 | 51,202,448 |
| கிடைக்கப்பெற்ற நிதியம் | | | |
| அடைக்காப்பகங்களினை தாபிப்பதற்கான செலவினம் | | | |
| தே.எ.ஆ.அபிவிருத்தி நிலையம் | 5 | (3,648,242) | (2,716,097) |
| ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மீதான கடன் தீர்வு | 5 | (3,847,348) | (3,068,879) |
| ருகுணு பல்கலைக்கழகத்தின் மீதான கடன் தீர்வு செலவினங்கள் | | **37,921,883** | 45,417,472 |

**14 மூலதன மானியம்**

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி | | 14,334,314 | (3,842,092) |
| கிடைக்கப்பெற்ற நிதியம் | | 7,900,000 | 24,538,000 |
| கருத்திட்ட செயற்பாடுகள் மீதான செலவினம் | 17 | (10,107,926) | (4,355,907) |
| பதவியணி செயற்றிறன் நிர்மானம் | | (533,750) | (270,000) |
| மூலதன மானிய கடன் தீர்வு - நிலையான சொத்துக்கள் | 5 | (1,686,650) | (1,735,688) |
| **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | | **9,905,989** | 14,334,314 |

**15 இலங்கை புத்தாக்குனர் நிதியம்**

| | | |
|---|---|---|
| ஜனவரி 31 இல் உள்ளவாறான மிகுதி | 13,240,886 | 8,998,495 |
| IFMSL கிடைக்கநிதியம் ப்பட்ட | - | 10,000,000 |
| "கொவிட் 19 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பகிரப்பட்ட மானியம்" | (305,120) | (4,822,043) |
| தே .எ.ஆ .அபி . நிலையத்திற்கு கொடுப்பனவு அச்சு உருவாக்கம் | - | (630,000) |
| கொவிட் மதிப்பீடு குழுவுக்கான கொடுப்பனவு | - | (125,000) |
| கை ,தொ .நிறு .கொடுப்பனவு --சோதனை அறிக்கைகள் | (93,582) | (176,040) |
| வரை ,நேனோ தொழில் தனியார் நிறுவகத்திற்கு கொடுப்பனவு - சோதனை அறிக்கை | (5,000) | (4,526) |
| **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **12,837,184** | 13,240,886 |

**16** அரச பங்களிப்பு

அரச பங்களிப்பின் சுருக்க விபரம் வருமாறு
இலங்கை கணக்கியற் சட்டம் 24 இற்கு அமைவுற

| | | |
|---|---|---|
| நடப்பு மானியம் | 40,370,000 | 40,600,000 |
| மூலதன மானியம் | 7,900,000 | 24,538,000 |
| வருடத்திற்கானது | **48,270,000** | 65,138,000 |

## நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| | | 2021<br>LKR | 2020<br>LKR |
|---|---|---|---|
| 17 | **ஏனைய வருமானம்** | | |
| | அனர்த்த கடன் வட்டி | 143,523 | 112,336 |
| | வெளிநாட்டு நாணய வட்டி | 24,984 | 10,601 |
| | நானாவித வருமானம் | 13,249 | 70,694 |
| | வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல் இலாபம் | 96,827 | - |
| | SN பதிவுக்கட்டணம் | 501,918 | 1,322,051 |
| | உரிமை ஊதியம் | 230,218 | 43,387 |
| | யானை வேலி கருத்திட்ட நிர்வாக வருமானம் | 233,123 | - |
| | | **1,243,843** | **1,559,070** |
| 18 | **தனி ஆள் வேதனாதிகள்** | | |
| | சம்பளங்களும் கூலிகளும் | 11,671,645 | 10,881,623 |
| | வாழ்க்கைப்படி செலவினம் | 2,301,000 | 2,169,028 |
| | தொழில் சார்பியல் படிகள் | 144,000 | 131,768 |
| | ஏனைய படிகள் | 591,000 | 565,500 |
| | சம்பளமற்ற விடுமுறை கட்டணம் | - | (2,511) |
| | ஊழியர் சேமலாப நிதி நிதிய செலவினம் | 2,095,897 | 1,957,221 |
| | ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | 419,179 | 391,444 |
| | மேலதிக நேரம் மற்றும் விடுமுறை கொடுப்பனவு | 663,301 | 406,108 |
| | உறுப்பினர்களுக்கான வேதனம் | 1,004,400 | 660,299 |
| | பதவியணி செயற்றிறன் நிர்மாணம் | 533,750 | 270,000 |
| | | **19,424,172** | **17,430,480** |
| 19 | **நிர்வாகம் மற்றும் தாபிப்பு செலவினம்** | | |
| | பிரயாண செலவினம் உள்ளூர் | 120,464 | 149,471 |
| | காகிதாயிகள் | 472,407 | 539,709 |
| | எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் செலவினம் | 956,731 | 582,417 |
| | திருத்தற் மற்றும் பேணல் செலவினங்கள் - கருவிகள் | 47,100 | 24,820 |
| | திருத்தற் மற்றும் பேணல் செலவினங்கள் - வாகனங்கள் | 2,350,107 | 923,526 |
| | தபாற் கட்டணம் | 47,900 | 43,035 |
| | தொடர்பாடல் கட்டணம் | 736,889 | 697,679 |
| | பயன்பாட்டு செலவினங்கள் | 75,491 | 39,853 |
| | ஒப்பந்த செலவினம் | 1,683,038 | 1,694,084 |
| | மின்சார கட்டணங்கள் | 1,213,047 | 1,290,361 |
| | துப்புரவாக்கற் கட்டணங்கள் | 469,752 | 499,913 |
| | நீர்க் கட்டணங்கள் | 122,717 | 84,741 |
| | வாடகை செலவினங்கள் | 13,375,000 | 14,835,938 |
| | களியாட்ட செலவினங்கள் | 309,020 | 217,378 |
| | கணக்காய்வு கட்டணங்கள் | 50,000 | 75,000 |
| | குத்தகை, வாடகை செயற்படச் செய்தல் | 1,790,550 | 2,387,400 |
| | ஏனைய நிர்வாக செலவினங்கள் | 1,190,359 | 1,068,941 |
| | | **25,010,573** | **25,154,266** |
| 20 | **புத்தாக்குனர் ஊக்குவிப்பு செலவினங்கள்** | | |
| | அடிமட்டத்து புத்தாக்குனருக்கு ஊக்கமளிப்பு | - | 61,180 |
| | மாகாண மட்டத்து தெரிவு கண்காட்சி | - | 922,971 |
| | புத்தாக்குனர் - புத்தாக்கம் மேம்படுத்துகை செயற்பாடுகள் | 636,657 | 904,194 |
| | ஜனாதிபதி விருதுகள் | 110,111 | - |
| | சஹசக் நிமவும்' தேசிய கண்காட்சி | 4,924,909 | 1,017,820 |
| | விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்தல் | - | 557,812 |
| | ஆக்கவுரிமை தொடர்பில் புத்தாக்குனர்களுக்கு ஆதரவு வழங்கல் | - | 37,210 |
| | புத்தாக்குனர் கழகங்களினை தாபித்தல் | 2,993,863 | - |
| | SLAAS - FITI - 2020 | 731,616 | 509,750 |
| | வன விலங்கு நிகழ்ச்சித்திட்டம் | 413,379 | 344,971 |
| | அடை காப்பக நிலையம் | 59,545 | - |
| | புதுக்கண்டுபிடிப்பு மானிய திட்டம் | 153,845 | - |
| | புத்தாக்கங்களினை வர்த்தகமயப்படுத்தல் | 12,000 | - |
| | IAFM - SL நிகழ்ச்சித்திட்டம் | 72,000 | - |
| | | **10,107,926** | **4,355,907** |
| 21 | **ஏனைய செலவினங்கள்** | | |
| | சொத்து விற்பனை நட்டம் | 560,943 | 2,732 |
| | வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்களில் நட்டம் | - | 5,131 |
| | | **560,943** | **7,863** |

எனது இல.: IMT/D/SLIC/1/21/56 18, மே மாதம் 2022

ஆணையாளர்
இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

**இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் 2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகள் (SLPSAS) இல.7ன் பிரிவு 65 இன் படி ஒவ்வொரு வருடமும் அறிக்கையிடல் காலத்தின் இறுதித்திகதியில் ஒரு சொத்தின் எஞ்சிய மதிப்பு மற்றும் பயனுள்ள வாழ்நாள் மதிப்பாய்வு செய்யப்படல் வேண்டும். எனினும் இன்னும் பயன்பாட்டில் உள்ளதும், முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டதும், நிதிநிலை அறிக்கையில் ரூ.8,674,312 மதிப்புடையதாகவும் காட்டப்படும் சொத்துக்களின் பயனுள்ள வாழ்நாளினை மதிப்பாய்வு செய்ய ஆணைக்குழு எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதுடன், இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகள் இல.03 இன் படி இவற்றை மீளவும் மீளாய்வு செய்கின்றது.

(ஆ) 12 வகைகளின் கீழ் அடங்குவதும் மொத்த மதிப்பான ரூ.2,866,966 கொண்டதுமான 16 நிலுவை செலவினங்களைக் கணக்கிடாததால், மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில், மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டிற்கான இலாபமானது, நிதிநிலை அறிக்கைகளில் அதே அளவில் அதிகரித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) புத்தாக்குனர் கழகங்களினை தாபிக்கும் நோக்கத்திற்காக மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 30 ஆம் திகதி எழுதப்பட்ட காசோலைகளின் மொத்த மதிப்பான ரூபாய் 1,610,000/= இல் ரூபாய் 990,000/= மதிப்புள்ள 99 காசோலைகள் குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு வழங்கப்படாமல் ஆணைகுழுவின் பாதுகாப்பில் இருந்தது. அதன்படி, இதன் காரணமாக புத்தாக்குனர் கழகங்களினை ஸ்தாபிப்பதற்காக செலவிடப்படாத ரூபாய் 990,000/= இனால் மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான செலவினமானது நிதிநிலை அறிக்கைகளில் அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்கா (நி.இக)ய்வினை நான் மேற்கொண்டேன்இக் கணக்காய்வு . நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான.பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டு ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த ஏனைய தகவல்கள்

ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் ஏனைய தகவல்களாவன உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாததாக காட்டப்பட்ட இந்த ஏனைய தகவல்களாவன, இக்கணக்ககாய்வு அறிக்கைக்குறிய திகதிக்கு பின்பே எனக்கு வெளிப்படுத்தப்பட்டது இதற்கு . முகாமைத்துவமே பொறுப்பாகும்.

நிதியியல் கூற்றுக்கள் பற்றிய எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் பற்றி வெளிப்படுத்தப்படவில்லை என்பதுடன் இத் தகவல்கள் தொடர்பில் எதுவித் உத்தரவாதமோ அல்லது அபிப்பிராயமோ என்னால் தர முடியாது.

நிதியியல் கூற்றுக்களினை பொறுத்த வரையில் எனது பொறுப்பானது, ஏனைய தகவல்கள் வெளிப்படுத்தப்படும் போது அவற்றினை வாசித்தலாகுஅவ்வாறு வாசிக்கும் போது எனது அறிவுக்கு எட்டிய வரையில் கணக்காய்வின் போது அல்லது வேறு ஏதேனும் வகையில் நிதிக்கூற்றுக்களில் காணப்படக்கூடிய இணங்காமையினை கருத்தில் கொள்தலாகும் .

ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டுக்குரிய ஆண்டறிக்கையில் திரவியங்கள் தொடர்பிலான தவறான கூற்றுக்கள் பற்றிய விபரங்களாவன ஒரு முடிவுக்கு வந்து அவை திருத்தப்படுவதற்கு அவ்விடயங்கள் ஆளுமை தரப்பினருடன் கலந்துரையாடப்படல் வேண்டும் மேலும் இத் தவறான கூற்றுகள்,திருத்தப்படவில்லை இலங்கை சனநாயக சோசலிச குடியரசினது,எனில் அரசியலமைப்பின 154 (6) எனும் இலக்கத்தினை கொண்ட உறுப்புரைக்கு அமைவுற இவ்விடயங்களாவன காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றத்தின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும்நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் . இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் மோசடி அல .பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்லலது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புடைய தரப்பினர் தெரியப்படுத்தப்பட்டனர்.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

**2.1** 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன

**2.1.1** 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் பிரிவு 12வினது தேவைப்பாடுகளுக்கு அமைய எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கணக்காய்விற்காக தேவையான சகல தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட வகையில் உரிய நிதி அறிக்கைகள் ஆணைக்குழுவினால் பேணப்பட்டிருந்தன.

**2.1.2** 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஐஆம் பிரிவின் (ஐஐஐ)(ஈ)( தேவைப்பாடுகளின் பிரகாரம்; சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றது.

**2.1.3** 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6ஆம் பிரிவின் (ஐஏ)(ஈ) தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன ஆனால் வேறு கீழே குறிப்பிடப்படுகின்ற எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன ஆனால் வேறு கீழே குறிப்பிடப்படுகின்ற எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் ஆளுனர் சபை உறுப்பினர் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவுடன் தொடர்புபட்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பாக நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் பொதுவான வியாபார நிலைமைக்கு புறம்பாக தொடர்பு உள்ளதாகவும்

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 (உ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலான எழுத்தினாலான சட்டம் அல்லது நிர்வாக சபையினால் விநியோகிக்கப்பட்ட பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் இணங்கியொழுகாது இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு செயற்பட்டுள்ளதாகவும்.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம், இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்காத வகையில் செயற்பட்டுள்ளதாகவும்.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ பிரிவின்)தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் பெறப்பட்டு பயன்படுத்தியிருக்கவில்லை எனவும்.

## 2.3 ஏனைய விடயங்கள்

ரூபாய் 9,602,964/= பெறுமதியானதும் நிலுவையில் உள்ளதுமான 15 கடன் நிலுவைகளுக்கு நூறு சதவீதம் ஐயக்கடன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் கண்டுபிடிப்பாளர் நிதியத்தால் வழங்கப்பட்டதும் ரூபாய் 9,317,683/= பெறுமதியுமான கடன் நிலுவைகள் 12 உள்ளடங்கியுள்ளது. இந்த கடன் நிலுவைகளை மீட்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லை.

**W.P.C. விக்கிரமரட்ன**
**கணக்காய்வாளர் நாயகம்**

## 2021 ஆம் ஆண்டில் கணக்காய்வு விசாரணைகள் மூலம் முன்வைக்கப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவமும் பணிப்பாளர் சபையும் எடுத்த நடவடிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தால் வழங்கப்பட்ட விளக்கங்கள் |
|---|---|
| 1. இலங்கை பொதுத்துறை கணக்கியல் கட்டளைச்சட்ட இலக்கம் 7 இனது பிரிவு 65 இன் படி, ஒரு சொத்தின் எஞ்சிய மதிப்பு மற்றும் பயனுள்ள வாழ்நாள் மதிப்பாய்வு ஆகியன குறைந்தபட்சம் அறிக்கையிடல் காலத்தின் கடைசித் திகதியில் மீளாய்வு செய்யப்படல் வேண்டும் என்ற இருந்த போதிலும், ரூபாய் . 8,674,3¯2 மதிப்புடையதும் முற்றிலும் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டதும் இன்னும் பயன்பாட்டில் உள்ளதுமான சொத்தின் பயனுள்ள வாழ் காலத்தினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன் இவை மீண்டும் இலங்கை பொதுத்துறை கணக்கியல் கட்டளைச்சட்ட இலக்கம் எண். 03 இன் படி மீண்டும் மதிப்பாய்வு செய்யப்பட்டது. | இந்த சொத்து வகைகளின் கீழ் அடங்கும் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வெவ்வேறு வகைகளைச் சேர்ந்தவை; இவை யாவற்றுக்கும் பயனுள்ள வாழ்நாள் மதிப்பாய்வினை ஒரே முறையில் பொதுவாக மதிப்பிடுவது நடைமுறையில் சாத்தியமன்று . இவற்றை தனித்தனியாக நோக்கினால் , அவற்றின் பயனுள்ள வாழ் காலத்தில் அதீத வேறுபாட்டினை காணலாம்.<br><br>எனவே, மதிப்பீடு செய்யப்பட்ட பயனுள்ள வாழ்காலத்தில் திருத்தங்களைச் செய்வது நடைமுறையில் சாத்தியமன்று இவை இலங்கை பொதுத்துறை கணக்கியல் கட்டளைச்சட்ட இலக்கம் எண். 03 இன் பிரிவு 45 இன் படி மட்டுமே வெளிப்படுத்தப்பட்டன. |
| 2. மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்துடன் தொடர்புடையதும் மொத்தம் ரூபாய் 2,286,966/= ஆக இருப்பதும் 12 வகைகளின் கீழ் அடங்குவதுமான 12 நிலுவை செலவினங்களினது கணக்கு காட்டப்படாததால் . தொடர்புடைய ஆண்டிற்கான இலாபம் அதே மதிப்பில் நிதிநிலை அறிக்கைகளில் மிகைப்படுத்தப்பட்டுள்ளது. | அவதானிப்புடன் நான் உடன்படுகிறேன். 01/01/2022 இல் உள்ளவாறான பேரேட்டு கணக்குடன் தொடர்புடைய கணக்கின் திருத்தத்திற்கான இருமக்குறிமான குறிப்பின் நகல் சமர்ப்பிக்கப்பட்டது |
| 3. ரூபாய் 1,610,00/= மொத்த மதிப்பினை கொண்டதும் மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் டிசம்பர் 30 ஆம் திகதியினை கொண்டதுமான காசோலைகளில் ரூபாய் 990,000/=மதிப்புடையதும் 161 பாடசாலைகளில் புத்தாக்குனர் சங்கங்களினை தாபிப்பதற்குமாக எழுதப்பட்ட காசோலைகள்., | காசோலை வைப்பு செய்யப்படுவதற்கு விண்ணப்பமானது பாடசாலையில் இருந்து அனுப்பப்படல் வேண்டும் . எனினும்.கோவிட்-19 தொற்று காரணமாக பள்ளிகள் மூடப்பட்டதன் விளைவாக, இந்த விண்ணப்பங்கள் ஆணைக்குழுவிற்கு |

| | |
|---|---|
| மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் 31 மார்ச் 2022 க்குள் கூட சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு வழங்கப்படாமல் ஆணைக்குழுவில் வைக்கப்பட்டிருந்தது எனவே, ரூபாய் 990,000/= ஆனது நிதிநிலை அறிக்கைகளில் புத்தாக்குனர் சங்கங்களினை நிறுவுவதற்குச் செலவிடப்படவில்லை, என்பதனால் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளில் அதே அளவில் செலவினம் அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | அனுப்பப்படவில்லை, எனவே சம்பந்தப்பட்ட பள்ளிகளுடன் ஒருங்கிணைந்து இந்த காசோலைகளை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.. |
| 4. நிதிநிலை அறிக்கைகளில் உள்ள சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் கீழ் உள்ளதும் ரூபாய் 168,975.00/= மதிப்புடையதுமான அலுவலக உபகரணங்கள், பெயர் பலகைகள் மற்றும் அலுவலக கருவிகளாவன சரியான முறையில் பயன்படுத்தப்படாததாக இருந்த போதிலும் அவற்றினை அப்புறப்படுத்தவும் அகற்றவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ரூபாய் 19,990/= பெறுமதியுடைய ஒரு டிவிடி காணொளியானது தவறுதலாக, பயன்பாட்டில் இல்லாத ஒரு சொத்தாக பட்டியலிடப்பட்டது. எதிர்கால நிதிநிலை அறிக்கையில் இதை திருத்த நடவடிக்கை எடுக்கப்படும் 2021 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட இருப்பு மதிப்பீட்டின் போது, மதிப்பீட்டு சபையானது, ரூபாய் 110,805/= மதிப்புள்ள பெயர் பலகைகளை அகற்ற பரிந்துரைத்தது. இதனைத்தொடர்ந்து ரூபாய் 38,000/= மதிப்புள்ள பெயர் பலகைகள் இந்த வளாகத்திற்குள் பயன்படுத்துவதில் சிரமம் ஏற்பட்டதால் தற்காலிகமாக பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. |
| 5. , ரூபாய் 9,317,683/= பெறுமதி உடையதும் பெறத்தக்கதுமான 15 கடன் நிலுவைகள் தொடர்பில் 100% ஐயக்கடன் ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டது, இதற்குள் ரூபாய் 9,602,964/= மதிப்புடையதும் புத்தாக்குனர் நிதியத்தின் ஊடாக கொடுக்கப்பட்டதுமான 12 கடன்களும் உள்ளடங்கும் . எவ்வாறாயினும் இந்த கடன்களினை வசூலிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லை | இந்த நிலுவைகள் 2011 ஆம் ஆண்டு முதல் பெறத்தக்க நிலுவைகளாக கணக்குப் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. புத்தகங்களில் இருந்து இந்த நிலுவைகளை பதிவழிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் வரை 100% ஐயக் கடன் ஒதிக்கீடு ஒதுக்கப்பட்டது. |
| 6. காசு கிடைக்கப்பெறும் வரிசை முறைக்கேற்ப காசு புத்தகத்தில் வரிசை எண்களுடன் குறிப்புகள் பதியப்பட்டு புதுப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் , அந்த குறிப்புக்களாவன | எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகள் நடக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

| | |
|---|---|
| அதே வரிசை எண்களுடன் தொடர்புடைய ஆவணங்களில் அதே எண்ணைக் குறிப்பிடப்படல் வேண்டும், மேலும் காசு புத்தகத்தின் குறிப்புகளில் உள்ள திகதியானது , பணம் பெறும் போது வழங்கப்பட்ட ரசீதினது திகதியுடன் ஒப்பிடப்படல் வேண்டும் , பணம் பெறும் புத்தகத்தில் ரசீதின் எண்ணானது வரிசை எண்ணின்படி உள்ளிடப்படவில்லை என்பது கவனிக்கப்படுகிறது. | |
| 7. .காசு ப்புத்தகத்திற்கான குறிப்புகளில் வரிசை எண்கள் உள்ளிடப்படல் வேண்டும் என இருந்த போதிலும் , ஆணைக்குழுவில் பராமரிக்கப்படும் காசுப் புத்தகத்தை ஆய்வு செய்தபோது, ஆணைக்குழுவில் அத்தகைய முறையை நடைமுறைப்படுத்தவில்லை என்பது கவனிக்கப்பட்டது. | அவதானிப்புடன் நான் உடன்படுகிறேன் உங்கள் அறிவுறுத்தலின்படி, வரிசை எண்களின்படி ஆணைக்குழுவில் காசுப்புத்தகத்தை பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 8. காசோலை புத்தகங்கள் பற்றிய விவரங்களை உள்ளிடுவதற்கான பதிவேட்டை ஆணைகுழு பராமரிக்கவில்லை | அவதானிப்புடன் நான் உடன்படுகிறேன் நீங்கள் வழங்கிய அறிவுறுத்தல்களின்படி, 2022 ஆம் ஆண்டு முதல் காசோலை புத்தகங்களுக்கான பதிவேட்டை பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 9. எழுதப்பட்ட ஒவ்வொரு காசோலைக்கும் காசோலைப் புத்தகத்தில் வவுச்சர் எண்ணைக் குறிப்பிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும், ஆணைக்குழு இது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை. | . கருத்துடன் நான் உடன்படுகிறேன் சில சமயங்களில் காசோலைப் புத்தகத்தின் மீதமுள்ள பகுதியில் வவுச்சர் எண்கள் குறிப்பிடப்படுவதில்லை, எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகளைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| 10. ரூபாய் 414,489/= மதிப்புடைய 528 டி-சர்ட்களாவன தேவையை பகுப்பாய்வு செய்யாமல் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு 2018 ஆம் ஆண்டில் சஹசக் நிமவும் திட்டத்திற்காக அச்சிடப்பட்டிருந்தது . மதிப்பாய்வின் ஆண்டின் இறுதி வரையிலும் கூட இந்த டி-சர்ட்களாவன ஆணைக்குழுவில் இருந்ததுடன் இவை சரக்குகளில் சேர்க்கப்படவில்லை. | அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவரின் கீழ் தனியான உப சரக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றது மேலும் நீங்கள் காட்டியவாறு பிரதான சரக்குகளில் இதனை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 11 மொத்த மதிப்பு ரூ. 743,089.00/= உடைய 40 காசோலைகளாவன சரியான திட்டமிடல் | அவதானிப்புடன் நான் உடன்படுகிறேன் இந்த காசோலைகளில் சிலவற்றை |

| | |
|---|---|
| மற்றும் தேவைகள் இல்லாமல் பல்வேறு திட்டங்கள் மற்றும் செலவுகளுக்காக எழுதப்பட்டுள்ளது. இது சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு வழங்கப்படாமல் ஆணைகுழுவிலேயே வைக்கப்பட்டிருந்தது | அறுதியிடு செய்வதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| 12. சஹசக் நிமவும் போட்டி 2021 இன் மதிப்பீடுகள் 26 டிசம்பர் 2021 க்குள் முடிவு செய்யப்பட்டு பாடசாலைக பிரிவில் வெற்றி பெற்றவர்களுக்கு பணப் பரிசுகள் வழங்கப்பட்டன. . . எவ்வாறாயினும், போட்டி நிறைவு பெற்று 176 நாட்களைத் தாண்டிய பின்னரும் பாடசாலை பிரிவு மற்றும் பிற பிரிவுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் வண்ணங்கள் வழங்கப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட வேண்டிய விருது வழங்கும் விழாவிற்கான நிதி ஒதுக்கீடுகளை திறைசேரி 31 மார்ச் 2022 அன்று வழங்கியது எனினும், தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை எண் 03/2022 இன் படி இந்த நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன, எனவே, கொள்முதல் செயல்முறைகள் மற்றும் விழா ஏற்பாடுகளுடன் தொடர்புடைய ஏற்பாடு நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டன.. |
| 13, தேசிய பொருளாதாரத்தின் வளர்ச்சியினை கருத்தில் கொண்டு IAFM( புத்தாக்குனர் துரிதப்படுத்தல் நிதி பொறிமுறை ) மூலம் வழங்கப்படும் நிதி உதவிகளுக்கு பற்று சீட்டுக்கள் மற்றும் பிற ஆவணங்கள் சமர்ப்பிக்கபடல் வேண்டும் என இருந்த போதிலும் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தின்படி 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் ஏ. சஞ்சீவ சமரவிக்ரமவுக்கு வழங்கப்பட்ட நிதி உதவியான ரூபாய் 3,187,500/= தொடர்பில் 2022.ஜூலை மாதம் 25 ஆம் திகதி வரையில் அதாவது கணக்காய்வு செய்யப்படும் திகதி வரையில் எதுவித ஆவணங்களும்பெறப்படவில்லை | உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கப்பட வேண்டிய பற்று சீட்டுகள் மற்றும் ஏனைய ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டதுடன், கூட்டம் ஒன்றும் நடத்தப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| 14. பல கட்டங்களாகச் செயல்படுத்தப்பட்டு, மதிப்பாய்வில் உள்ள ஆண்டில் மட்டும் ரூபாய் 22 மில்லியனுக்கும் அதிகமான செலவில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் திட்டமானது ,வரையறுக்கப்பட்ட நனோ விஷன் தனியார் நிறுவகத்தினால் செய்யப்பட்டது ஆகும் .மேலும் இந்த விநியோகத்தர் கொள்முதல் வழிகாட்டுதல்களின் விதிகளினை முறையாக கடைபிடியாது தேர்ந்தெடுக்கப்பட்டவர ஆவார் . | மகாவலி அதிகாரசபையின் கோரிக்கையின் அடிப்படையில் மனித மிருக மோதலை குறைக்கும் நோக்கில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, இலங்கை மகாவலி அதிகாரசபையுடன் இணைந்து மகாவலி வலயங்களில் பல முன்னோடி திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.. இந்த முன்னோடித் திட்டத்தில் (இணைப்பு 05) கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, பொருத்தமான புத்தாக்குனர்களினை கண்டறிய ஆணைகுழு உதவியது, மேலும் உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தைகளைக் கண்டறிய புத்தாக்குனர்களுக்கு உதவுவது, ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்ட ஒரு செயல்பாடு என்பதால், புத்தாக்குனர்களுக்கான சந்தை வாய்ப்புகளை ஆராய்வதற்கு இந்தத் திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டது . இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கும் இலங்கை மகாவலி அதிகாரசபைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் இரண்டாம் பந்தியின் கடைசி பந்திற்கு அமைவுற. இந்த முன்னோடி திட்டத்திற்கு தேவையான அனைத்து கொள்முதல்களும் இலங்கை மகாவலி அதிகாரசபையால் மேற்கொள்ளப்படல் வேண்டும். தேவையான உபகரணங்களின் அளவு மற்றும் இந்த உபகரணங்களுக்கான மதிப்பீடுகளை மட்டுமே ஆணைக்குழு அனுப்பியுள்ளது. |

| | |
|---|---|
| **15.** இந்த கணக்காய்வு தொடர்பில் . தேசிய அறிவுசார் சொத்து அலுவலகம் நடத்திய விசாரணையின்படி, மனித-விலங்கு மோதலைக் குறைப்பதற்கு நான்கு உள்ளூர் காப்புரிமைகள் இருந்தன என்பதும், மேற்கண்ட திட்டம் குறித்து அவர்களுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை என்பதும் தெரியவந்துள்ளது. . காப்புரிமை பெற்றவர்களைக் கருத்தில் கொள்ளாமல் பொது நபர் ஒருவருக்கு இந்த ஒப்பந்தத்தை வழங்கியதன் மூலம் ஆணைக்குழு தனது தேசியப் பொறுப்பைத் தவிர்த்துள்ளதைக் காண முடிந்தது. | காப்புரிமைப் பட்டியலில் உள்ள 04 கண்டுபிடிப்பாளர்களில் 02 பேர் (காப்புரிமை எண். 17895 மற்றும் 18814) வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்துடன் செயல்படுத்தப்பட்ட முன்னோடித் திட்டங்கள் குறித்து அறிந்திருந்தனர். வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் மற்றும் இலங்கை மகாவலி அதிகார சபையுடன் இணைந்து செயற்படுத்தப்பட்ட. வணிகமயமாக்கல் நிலைகளில் வனவிலங்கு பாதுகாப்புத் துறையுடன் செயல்படுத்தப்பட்ட முன்னோடித் திட்டத்தில் வெற்றியைக் பெற்ற கண்டுபிடிப்பாளர் மட்டுமே கருத்தில் கொள்ளப்பட்டார்<br><br>வனவிலங்கு பாதுகாப்புத் துறையுடன் செயல்படுத்தப்பட்டதும் முதல் முன்னோடித் திட்டத்துடன் தொடர்புடையதும் 17772 மற்றும் 15277 ஆகிய காப்புரிமை எண்களினை கொண்டதுமான இரண்டு கண்டுபிடிப்புகள் பங்கேற்பு பெறாதது குறித்த உங்கள் அவதானிப்புகளுடன் நான் உடன்படுகிறேன். . எவ்வாறாயினும், இந்த 04 கண்டுபிடிப்புகளில் எதுவும் மின்சார அமைப்புடன் இணைக்கப்படவில்லை, இதன் காரணமாக, இந்த கண்டுபிடிப்புகளை இந்த முன்னோடி திட்டத்தில் பயன்படுத்த முடியவில்லை. |
| **16.** . மேலும், மகாவலி வலயங்களின் குடியேற்றங்கள் மற்றும் கால்வாய்களின் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கான இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு எழுதப்பட்டதும் , அக்டோபர் 23, 2020 எனும் திகதியினை கொண்டதுமான கடிதத்தில், இந்தக் கட்டுமானம் தொடர்பில் தனது ஆட்சேபணையைத் | மகாவலி வலயங்களின் குடியேற்றங்கள் மற்றும் கால்வாய்களின் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கான இராஜாங்க அமைச்சின் செயலாளரு க்கு எழுதப்பட்டதும் , அக்டோபர் 23, 2020 எனும் திகதியினை கொண்டதுமான கடிதத்தில், இந்தக் கட்டுமானத்திற்கு காப்புரிமை பெற்ற ஒருவர் தனது ஆட்சேபணையைத் |

| | |
|---|---|
| காப்புரிமை பெற்ற ஒருவர் தெரிவித்து உள்ளார் . இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஆணைக்குழுவிற்கு அறிவித்திருந்த போதிலும் ஆணைக்குழு இது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை. | தெரிவித்தது தொடர்பில் நோக்கினால் ; இவ்விடயம் தொடர்பில் 2021 பெப்ரவரி 18 ஆம் திகதியினை உடையதும் MASL/D/RDSP/03/03 எனும் இலக்கத்தினை கொண்டதும் இலங்கை மகாவலி அதிகார சபையினால் அனுப்பப்பட்டதுமான கடிதம் தொடர்பில் மீது ஆணைக்குழு தனது கவனத்தை செலுத்தியது. எவ்வாறாயினும் இந்தக் கடிதத்தின் பிரகாரம் கண்டுபிடிப்பாளர் எச்.கே.சரத் காமினி தனது காப்புரிமை இலக்கம் 18814 ஐ கொண்ட தனது கண்டுபிடிப்பினை தனக்குத் தெரிவிக்காமல் பயன்படுத்தியமைக்கு ஆட்சேபணை தெரிவித்திருந்தாரே.தவிர ஆணைக்குழுவானது இலங்கை மகாவலி அதிகார சபையுடன் இணைந்து செயற்படுத்தும் முன்னோடித் திட்டத்திற்கு எதிராக எழுப்பப்பட்ட ஆட்சேபணை அல்ல.இது இலங்கை மகாவலி அதிகாரசபையுடன் இணைந்து செயற்படுத்தப்பட்ட திட்டங்களுக்கு அவரது கண்டுபிடிப்பானது ஆணைக்குழுவால் பயன்படுத்தப்படவில்லை என்பதே இங்கு குறிப்பிடப்படும் குற்றச்சாட்டே தவிர இது ஆணைக்குழுவிற்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அல்ல..மகாவலி அதிகாரசபையுடன் நாம் ஆரம்பகட்ட கலந்துரையாடல்களை மாத்திரமே மேற்கொண்டிருந்த காலப்பகுதியில் அதாவது 23.10.2020 அன்று அவர் இந்தக் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார் எனவே இது ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்படவில்லை.. இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஆணைக்குழுவிற்கு அறிவித்திருந்த போதிலும் ஆணைக்குழு இது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை. |

| | |
|---|---|
| 17. மேலும், புத்தாக்குனர்களின் கண்டுபிடிப்புகளை உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் சந்தைப்படுத்த உதவுவது ஆணைக்குழுவின் நோக்கங்களில் ஒன்றாக இருந்ததினால் , இதன் மூலம் வருமானம் ஈட்டப்படுவது விரும்பப்படாததாக இருந்த போதிலும், இந்த திட்டத்தின் மூலம் ஆணைக்குழுவானது ஒப்பந்தக்காரர்களிடம் 30% உரிமை ஊதிய கட்டணத்தை வசூலித்துள்ளது. அதன்படி, ஒப்பந்ததாரர் ஆணைக்குழுவிற்கு செலுத்த வேண்டிய இந்த 30% உரிமை ஊதிய கட்டணத்தினை தனது மதிப்பீட்டில் சேர்த்துள்ளார், எனவே இந்த தேவையற்ற சுமையை அரசாங்கம் சுமக்க வேண்டியிருந்தது. | ஆணைக்குழுவினால் அவ்வப்போது எடுக்கப்பட்ட கொள்கை முடிவுகளின்படி, கண்டுபிடிப்பாளர்களின் கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்கும்போது, ஆணைக்குழு அவர்களுக்கு ஆதரவளிப்பதனால் , அவர்களிடம் இருந்து உரிமை ஊதிய கட்டணம் வசூலிக்கப்படுகிறது. உரிமை ஊதியத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தை மற்றொரு கண்டுபிடிப்பாளருக்கு தேவையான உதவிகளை வழங்க பயன்படுத்துகிறது. இந்த வருமானத்தினை ஆணைக்குழு எந்த நடப்பு செலவுகளுக்கும் பயன்படுத்தப்படவில்லை. இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் ஆகியவற்றுடன் செயற்படுத்தப்படும் திட்டங்களில் இருந்து மட்டுமின்றி, நிதி உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலமும் இந்த உரிமை ஊதிய கட்டணம் வசூலிக்கப்படுகிறது. |
| 18. மேலும், இந்தத் துறையில் காப்புரிமை பெறாத தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நிறுவனம் 05 ஜனவரி 2021 அன்று தெரிவு செய்யப்பட்டு ஒரு நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டது. அதன்படி, இந்தத் திட்டத்திற்குத் இந்த நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டபோதும், 2020 டிசம்பர் 23 அன்று கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போதும் இது ஒரு நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை. | .கண்டுபிடிப்பாளர் ஜி.டி.கே.சமரநாயக்கவினால் "Electric Energizer" என்ற கண்டுபிடிப்புக்கான காப்புரிமை பெறப்படாவிட்டாலும், அவர் உரிய காலத்திற்குள் காப்புரிமைக்கு விண்ணப்பித்திருந்தார். மேலே உள்ள எண். 04 இல் குறிப்பிட்டுள்ளபடி, காப்புரிமைக்கு விண்ணப்பித்த கண்டுபிடிப்புகளுக்கு ஆணைகுழு உதவுகிறது. . . வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்துடன் இணைந்து முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்தும் நேரத்தில், அவர் ஏற்கனவே "நனோ விஷன்" என்ற வணிகப் பெயரில் தனது வணிகத்தைத் தொடங்கினார், மேலும் இது 22.12.2020 அன்று நடைபெற்ற பணிப்பாளர் குழுவின் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது . இலங்கை மகாவலி அதிகாரசபையுடன் ஒப்பந்தத்தில் |

| | |
|---|---|
| | கைச்சாத்திடுவதற்கு முன்னர் அவர் தனது வியாபாரத்தை நிறுவனங்களின் பதிவுத் திணைக்களத்தில் பதிவு செய்துள்ளார்.. "Electric Energizer" மற்றும் "Radio collars for elephants" ஆகிய இரண்டு கண்டுபிடிப்புகளையும் அதன் நிறுவன கட்டமைப்பிற்குள் நிறுவனங்களின் பதிவுத் துறையில் பதிவு செய்ய ஆணைகுழு உதவி மற்றும் வழிகாட்டுதல்களை வழங்கியது. |